திராவிடநாடு

2956
15-9



கேட்டீரா சேதி!

அமைச்சர் பதவியிலிருந்து விலகிய தேஷ்முக், பார்லிமெண்டிலிருந்தும் ராஜினாமா செய்துவிட்டார்! ஆனால் 3000 ரூ சம்பளமுள்ள பல்கலைக் கழக மான்யக் குழுவின் தலைமைப் பொறுப்பை, ஆசாத் விருப்பத்தின் பேரில் ஏற்றுக்கொண்டிருக்கிறார். தான் சம்பளம் பெருமலே இப்பதவியை வகிப்பதாகக் கூறியதால் பெயரளவுக்கு மாதம் ஒன்றுக்குச் சம்பளமாக ஒரு ரூபாய் பெற்றுக்கொள்வார்!

*

திருமங்கலத்திலுள்ள ஆவணப் பதிவாளர் அலுவலகத்தை ஒரு காங்கிரஸ்காரர் ஆக. 26-ந் தேதி, தீயிட்டாராம்! மூணாண்டிபட்டியில் பாரதி ஆசிரமம் என்பதை நடத்திவரும் சுப்பு எனும் காங்கிரஸ்காரர் அந்த வட்டாரத்துத் தியாகியார். சர்க்கார் அலுவலகத்துக்குத் தீயிட்ட அவர் கூறிய விளக்கம், "சுதந்திரத்துக்குப் பிறகு காங்கிரஸ் கெட்டுவிட்டது. ஏழை பணக்காரன் வித்தியாசம் பெருகிக்கொண்டே போகிறது. இதுகுறித்து மக்களின் கவனம் திருப்பப்பட வேண்டும். அதற்காகவே இப்படிச் செய்தேன்!" என்பதாம்.

*

சென்னைக்கு டாக்டர் ராசேந்திர பிரசாத் வந்துசெல்லமட்டும் போலீசுக்கு 9-லட்சம் செலவழிந்ததாம்! அவர் சென்னையிலிருந்தவரையில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கு ஆளாகி, மக்கள் பட்டபாடு சொல்லுந் தரமல்ல. குடியரசுத் தலைவரின் 'வரவால்' போலீஸ் படையில் இருவர் உயிரிழக்கவும் செய்திருக்கின்றனர்! பிரசாத் வந்த ரயிலுக்கு முன்னதாகச் சென்ற பாதுகாப்புரயிலிலிருந்து சென்ற ஒருபோலீஸ்காரர் தவறிவிழுந்து, ஆந்திர எல்லையில், ரயிலுக்கு இரையானார். இன்னொருவர் ஈரோட்டில் சப்இன்ஸ்பெக்டராகயிருந்தவராகும்! சென்னைக்கு பந்தோபஸ்துக்காக வந்த இவர், திடீரென மாண்டார். பிரசாத்தின் வருகையை யார் மறந்தாலும், அமங்கலிகளான இரு குடும்பத் தலைவிகளும் எப்போதும் மறக்கமாட்டார்கள்.

*

நாகநாடு கோரும் நாகர்கள், ஆயுத பலம் வாய்ந்த இந்தியத் துருப்புகளை எதிர்க்க விதவிதமான முறைகளைக்கையாளுகிறார்களாம். விற்களில் தீப்பந்தங்களை அம்புபோலப் பொருத்தி அடிப்பதாகவும், அதனால் பல இடங்கள் தீக்கு இரையாகுவதாகவும் முன்பு கூறப்பட்டது. இப்போது நாகமலைப் பிரதேசம் சென்றுவந்த இந்திய இராணுவ அதிகாரி இன்னொரு விபரம் தெரிவிக்கிறார். நாகர்கள், முரட்டுப் போர்வைகளை உடம்பெல்லாம் போர்த்திக்கொண்டு வருகிறார்களாம்! அவர்களை நெருங்கி "யார்?" என்று கேட்க முனைந்தால், திடீரெனப் போர்வையை எடுத்து கேட்போர் மீது வீசிவிட்டு, தாக்குகிறார்களாம். சுதந்திர ஆர்வம் எத்தனையோ வழிகளைச் சொல்லித் தரத்தானே செய்யும்!

*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எப்படியாவது மக்களுக்குப் புரியவைக்க வேண்டுமென்பதில் டில்லி, ஏராளமான முயற்சிகளைச் செய்து வருகிறதல்லவா? இப்போது கிராமபோன் இசைத்தட்டுகளை வெளியிடப் போகிறார்களாம்! இவைகளை இலவசமாக அளிப்பார்களா, அதோடு கிராமபோனும் சேர்த்து ஊருக்கு ஊர் தருவார்களா என்பது தெரியவில்லை. இது தவிர, பள்ளிகளிலெல்லாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிப் பாட நூல்கள் வேறு வைக்கப்படுமாம்.

*

புது டில்லியில் வாழும் வீட்டு வேலைக்காரர்கள் 5000பேர் ஆக. 4ந் தேதி பார்லிமெண்டுக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் செய்தனராம்! வாரத்துக்கு ஒருநாள் விடுமுறையும், நாளைக்கே 10-மணி நேர வேலைசெய்யும் உரிமையும், தர வேண்டுமென்பது இவர் தம் கோரிக்கை. இவர்கள் தமக்கென ஒரு சங்கமும் அமைத்துக் கொண்டுள்ளார்களாம்.

*

பல்லைப் பிடுங்கிவிட்டு தங்கப் பல்லோ தந்தப் பல்லோ கட்டப்படுகிறதல்லவா? இது பற்றி ரஷ்யாவில் விஞ்ஞானிகள் புது ஆராய்ச்சி நடத்தி வெற்றி கண்டுள்ளார்களாம். இதன்படி, நிசப் பல்லுக்குப் பதிலாக, பொய்ப் பல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதை பல் எடுக்கப்பட்ட இடத்தில் வைத்துப் பொருத்தி விடலாமாம்! இரண்டு மூன்று மாதங்களுக்குள், இந்தப் பல் நிசப்பல்லைப் போலவே ஒட்டிக் கொண்டு விடுமாம். இரத்த ஓட்டம் செல்லும், அமைப்பும் இந்தப் பற்களில் செய்யப் பட்டுள்ளதாம். பல் விழுபவர்களுக்கும், பொய்ப் பல் கட்டிக் கொள்பவர்களுக்கும் இது ஓர் வரப்பிரசாதமாக விளங்குமென்று கருதப் படுகிறது.

*

மரண தண்டனைகளை ஒழிக்கலாமா என்று மாகாணங்களை யோசனை கேட்டதில், பல மாகாணங்கள் கூடாது எனக் கூறியிருப்பதாக டில்லி பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★

தான்தோன்றிப் போக்கு!

மலர் 15] ஆண்டுச் சந்தா ரூ. 7 [2–9–56] தனிப் பிரதி 2 அணா [இதழ் 9

சென்னை சட்ட சபையில் சில திங்களுக்கு முன் பேசிய நிதி மைச்சர் திடமாகத் தெரிவித்தார், நமக்கும் அண்டை மாகாணங்களுக்குமிடையேயுள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்க்க டில்லி ஒரு கமிஷனை நியமிக்கும். அப்படி நியமிப்பதாக நேரு வாக்களித்துள்ளார். வாக் குறுதியை அவர்கள் மறுப்பார்கள் என்று நான் கருத வில்லை! என்பதாக.

இதோ, செய்தி வந்துவிட்டது, அப்படி யேதும் எல்லைக் கமிஷன்கள் நியமிக்கும் உத்தேசம் எமக்குக் கிடையாது என்று! தோழர் சுப்பிரமணியம், திடமாகத் தெரிவித்து சில தினங்கள்தான் ஓடியுள்ளன — பார்லி மெண்டில் பலர் அது குறித்து வற்புறுத்தியுங்கூட டில்லி ஏற்கவில்லை, மறுத்துவிட்டது!

நாஞ்சில் பகுதிகள், திருத்தணிப் பகுதிகள் பற்றி இப்போது எந்த முடிவும் செய்யப்படாதாம் — மண்டலக் கவுன்சில்கள் அமைக்கப்பட்டபின், அது பார்த்துக் கொள்ளுமாம்!

இரண்டு மூன்று மாநிலங்களை ஒன்றாக்கி, அவை களின் பொது விவகாரங்களைக் கவனிப்பதற்கென, ஒரு கவுன்சில் நிறுவுவதென்று, டில்லி முடிவெடுத்துள்ளது. இந்த முடிவுப்படி தென் மண்டலக் கவுன்சில்களில் கேரளம், ஆந்திரம், தமிழகம் இவைகள் மட்டுமே இருக்கும்! ஆனால் தென்னாட்டைச் சேர்ந்ததான மைசூர் மட்டும் இதிலிருக்காதாம். பம்பாய் இடம்பெறப்போகும், மேற்கு மண்டலத்திலிருக்குமாம், மைசூர். தென்னகம் என்றாலே தெலுங்கு தேசமும், கேரள ஓரமும், கன்னடப் பகுதியும், தமிழகமுமே கண்முன் ஓடிவரும். இவை நான்கும்கொண்ட தாக ஒரு கவுன்சில் அமைவதே, பொருத்தமானதாகும், அவர்தம் கூற்றுப்படி.

ஆனால், என்ன பயம் நேர்ந்ததோ தெரியவில்லை டில்லிககு—மைசூரை நம்மிடமிருந்து 'பிரிக்கும்' எண்ணம் வந்திருக்கிறது! இது தவறானது, நாங்கள் தென்மண்ட லத்தில்தானிருப்போம் என்று வலியுறுத்தி பார்லிமெண்டி லும், மேல் சபையிலும் பலர் பேசியிருக்கின்றனர். அவர் கள் எல்லாம், மாற்றுக் கட்சிக்காரர்களல்ல; காங்கிரஸ் காரர்கள்தான். மைசூர் உறுப்பினர்களான கோவிந்த ரெட்டி, எச். சி. தாசப்பா, கேரளத்தைச் சேர்ந்த திருமதி கே. பாரதி, ஆந்திரத்துடன் இணையவிருக்கும் ஐதராபாத் தைச் சேர்ந்த அக்பர் அலிகான், நமது டாக்டர் சுப்ப ராயன், ஆந்திரத்தைச் சேர்ந்த எஸ். சத்யநாராயணராஜி ஆகியோர் ஒரு திருத்தத் தீர்மானமே கொணர்ந்தனர்.

இதிலும் டில்லி, பிடிவாதம் காட்டி வீசியெறிந்து விட்டது! மைசூர் மட்டும் மேற்கு மண்டலத்திலிருக்குமாம்! இதற்கு டில்லி, சரியான காரணம் எதுவாவது கூறிற்றோ எனின் எதுவுமில்லை! அது அவர்களிஷ்டம். அவ்வளவு தான்.

'தமிழ்நாடு' கிடையாது—எல்லைக் கமிஷனும் இல்லை —தலையில் தட்டும் சுபாவமோ வளருகிறது. இது டில்லி!

இதுபோல இங்குமட்டும் என்றல்ல, ஒவ்வொரு மாநில விவகாரங்களிலும், அவர்கள் மாற்றுக் கட்சிக் காரர்களானாலும் சொந்தக் கட்சியையே சேர்ந்தவர் களானாலும் தமது பகுதியின் நலன் குறித்து யோசனைகள் கூறினால், மறுத்தே வருகிறது டில்லி. இப்படி, தன்னிஷ் டப்படி, மக்கள் கருத்தை மதியாமல் நடக்கிற காரணத்தால் தான் 'பம்பாயும்' 'குஜராத்தும்' ஏற்படுகிறதென்று டில்லி மேல்சபையில் பேசிய பண்டித குன்ஸ்ரு, எடுத்துக்காட்டி யுள்ளார். இவர், டில்லி ஏற்படுத்திய எஸ். ஆர். சி. கமிஷ னின் உறுப்பினர்களில் ஒருவர்!

யார் என்ன சொன்னாலும், எமது இஷ்டப்படி முடி வெடுப்போம், அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று டில்லி பிடிவாதமாகயிருப்பதால்தான் குஜராத் குமுறுகிறது! 'குமுறலை' வெளி உலகுக்கு மறைக்க தேசாயைக்கொண்டு 'ஒரு நாடகம்' நடத்த முனைந்தும் முடியவில்லை! மராட்டி யம் அடங்கியதென்று கருதாதீர் என்கிறார், மராட்டிய காங்கிரஸ் தலைவர், தேவ்கிரிகார்.

இங்குவந்த காங்கிரஸ் பொதுக்காரியதரிசியோ "ராஜ்ய புனரமைப்பு காரணமாகத் தெற்கில்தான் கிளர்ச்சி ஏற்படும் என நினைத்தோம். ஆனால் இங்கு அமைதியும், ஏனையபாகங்களில் கிளர்ச்சியும் உருவாகிற்று" என்கிறார். கிளர்ச்சி என அவர் பொருள்கொள்வது, மாற்றுக் கட்சி களைப்பற்றியல்ல! சொந்தக் கட்சியைக் குறித்து! குஜராத் தும், மராட்டியமும், பீகாரும், வங்கமும் இந்த அளவுக்குச் சென்றது; ஆனால் இங்கு எதுவும் நிகழவில்லை என்று வியப்படைகிறார்.

செய்வது அநீதியென்பதால், முன்னரே எதிர்பார்த் தனர்போலும் டில்லியினர்!

டில்லி, வேண்டுமென்றே தெற்கின் தலையினைக் குட்டு கிறது–மாநில அமைப்பு விஷயத்தில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும், எந்த டில்லியிடமிருந்து எல்லைக்கமிஷன் நியமிக்கப்படும் என்று எதிர்பார்த்தாரோ அதே சுப்ரமணி யம் ஆக. 28-ந்தேதி கோவைபெரியநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற கல்வி மாநாட்டில் கூறுகிறார் "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 18-தொழிற்கல்லூரிகள் அமைக் கப்படவிருக்கிறது. இதில் ஒன்றே ஒன்றுதான் தெற்கில் அமைக்கப்படுமாம்! இது எவ்வளவு துரதிர்ஷ்டமானது!" என்பதாக.

இப்படிக் குமுறும் அமைச்சர் டில்லியிடமிருந்து 'நல்லது' வரும் என்று அடிக்கடி, நம்பிக்கைகள் அளிக்க மட்டும் தவறுவதில்லை—எம். எல். ஏக்கள் கேட்கும்போது அந்த நம்பிக்கை நசித்தது மட்டுமல்ல, தான்தோன்றிப் போக்கே டில்லியின் இன்றைய வழி என்பதை சமீபகால நிகழ்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. ★



காஞ்சீபுரம்

2—9—'56

தம்பி !

போஸ்டர் வேண்டுமா, போஸ்டர்! கண்ணைக் கவரும், கருத்தைக் கிளறும்! காங்கிரஸ் ஒழிப்பிலே கவலைகொண்ட பெரியவர்களே! இளைஞர்களே! போஸ்டர் தயாரித்திருக்கிறோம், காங்கிரசுக்கு ஓட்டு போடாதீர்கள் என்று அழகாக அச்சடிக்கப்பட்ட போஸ்டர்—இலட்சக் கணக்கிலே உள்ளன — அடக்க விலை — ஆதாயம் கருதிப் போடப்பட்டதல்ல — வியாபார நோக்கத்துடன் வெளியிடப்பட்டதல்ல—நாட்டைக் கேடர்களிடமிருந்து மீட்டிட நல்லறிவுப் பிரசாரம் நடாத்துவதற்காகவே, பொருள் நட்டம், நேரக்கேடு, எதனையும் பொருட்படுத்தாது, இதனை வெளியிடுகிறோம்.

ஆயிரக் கணக்கிலே வாங்குங்கள் — விலை மலிவு — பல்லாயிரக் கணக்கிலே வாங்குங்கள்—பட்டி தொட்டிகளிலுள்ளோரும் வாங்குங்கள் —வீடுதோறும் ஒட்டிவையுங்கள் — ஓட்டு கேட்க வரும் காங்கிரசாரை ஒட்டுங்கள்.

காங்கிரசார் கண்களிலே, எந்தப்பக்கம் திரும்பினாலும் இந்தப் போஸ்டர்கள் படவேண்டும்—நாடே நமக்கு விரோதமாக இருக்கிறது — ஊரார் அனைவரும் ஒன்று கூடிவிட்டார்கள் நம்மை விரட்ட என்று கிலிகொண்டு அவர்கள் பிடரியில் கால்பட எடுக்க வேண்டும் ஓட்டம் — அதற்கு உதவக்கூடிய போஸ்டர், வாங்குங்கள் ஒட்டுங்கள்!

ஆயிரம் ஐந்தே ரூபாய்! கருப்பு மையில் அச்சிடப்பட்டது, கண்கவரும் வனப்புள்ளது.

நாலரை அல்லது ஐந்து அங்குல அகலம் இருக்கும் — பதினெட்டு அங்குல நீளம்!

புரட்சிகரமான தோற்றம் தேடுவோர், சிகப்பு மையில் அச்சிடப்பட்ட போஸ்டர்களை வாங்கலாம்—விலை சிறிதளவுதான் கூடுதல்—ஆயிரம் 7-ரூபாய்தான்!

காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் — என்ற இந்த அறிவுரைத் தாட்களை அனைவரும் ஆயிரக் கணக்கிலே வாங்கி, ஊரெங்கும் ஒட்டி திராவிட நாட்டுக்கு ஆபத்து வராதிருக்க நம்மாலான நல்ல தொண்டு செய்தோம் என்ற மனத்திருப்தியும் மகிழ்ச்சியும் பெறுங்கள். இந்தச் சிறு காரியத்தைக்கூடச் செய்யத் தவறுபவர்களை நாம் எப்படித் திராவிட மக்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியும்?

இழி ஜாதி மக்கள், ஈனப் பிறவிகள், காலித்தனத்தால் கூலித்தனத்தால் வயிறு கழுவும் வக்கற்ற மக்கள், என்று உலகு நாளைக்குக் கூறும். எனவே போஸ்டர் வாங்குங்கள், பொன்னான வாய்ப்பு, புனிதமான கடமை, பொறுப்பு உணர்ந்தோர்

“மிருக ஆட்சி...”

செய்து தீரவேண்டிய தொண்டு—காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள்—என்ற போஸ்டர்களை-வாங்கி எங்கும் ஒட்டி வைப்பதுதான்.

என்ன அண்ணு! இது! காங்கிரஸ் ஒழிப்புக்கான போஸ்டர் வெளியிடுகிறோம், விலை கொடுத்து வாங்கி ஊரெல்லாம் ஒட்டு என்றால் ஒட்டுகிறோம்—அற்காக, வாங்காதவர்கள், ஈனப் பிறவிகள் — இழிஜென்மங்கள் என்றெல்லாம் சுடுமொழி கூறுகிருயே, இதென்ன; என்றைக்குமில்லாத முறையில் இருக்கிறதே என்று சிறிதளவு கோபத்துடன் கேட்க எண்ணுகிருய் அல்லவா? தம்பி! சுடுசொல் கூறுபவனு நான்—உன்னையா நான் சுடுமொழியால் தாக்குவேன்? என் மொழியும் அவ்விதம் இராது—என் வழியும் அது அல்லவே! விஷயத்தைச் சொன்ன பிறகல்லவா உனக்கு உண்மை துலங்கும், கேள்.

சென்ற பொதுத்தேர்தலின் போது, காங்கிரஸ் கட்சி எப்படியும் ஒழிக்கப்பட்டாகவேண்டும்; அதிலே ஒரு சில கண்ணியவான்கள், ஓமந்தூரார்போன்ற உத்தமர்கள் இருந்தாலும் கவலைப்படுவதற்கில்லை, அந்த 'ஸ்தாபனம்' ஒழிக்கப்பட்டாகவேண்டியது மிக மிக அவசரமான கடமை, அதிலிருந்தும், அணுவளவும் பிசகுவது கூடாது, அச்சம், தயை தாட்சணியம்—முன்பின் தொடர்பு எதுவும் குறுக்கிடக்கூடாது என்று வீராவேசமாகத் திராவிடர்கழகம் சீறிப் போரிட்டபோது, விடுதலைக் காரியாலயம், காங்கிரசை ஒழித்துக் கட்டுங்கள்—காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று மக்களுக்கு அறிவு விளக்கம் தர, அவர்களை ஆண்மையாளர்களாக்க, கருப்பிலும் சிகப்பிலும், போஸ்டர்கள் பல இலட்சம் வெளியிட்டு, விற்பனை செய்தார்கள்—அதை நினைவூட்டுகிறேன் — உனக்குமட்டுமல்ல — அவர்களுக்கோ என்று கேட்டுவிடாதே, அவர்களுக்கு நான் தரும் கரும்பும் கசக்கும்—நாட்டவருக்கும் நினைவூட்டுகிறேன்.

அன்று காங்கிரஸ், எந்த அளவுக்கு, வெறுக்கப்படவேண்டிய, ஒழிக்கப்படவேண்டிய, கேடான 'ஸ்தாபனமாக' இருந்ததோ, அதிலே ஏதேனும் ஒரு துளி மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? நாமெல்லாம் வாழ்த்தி வரவேற்கத்தக்க, அல்லது சகித்துக்கொள்ளத்தக்க விதமான அமைப்பாக, காங்கிரஸ் மாறிவிட்டதா? பார்ப்போம்—இந்த ஒரு தடவை இருந்து தொலைக்கட்டும் — என்று கூறத்தக்க, மனநிலையை நாம் பெறுவதற்கான திட்டங்களை காங்கிரஸ் நாட்டுக்கு அளித்திருக்கிறதா? என்பன போன்ற எண்ணங்கள் என் மனதைக் குடைகின்றன, மனமென்ற ஒன்று இருந்து தொலைப்பதால்!

சென்ற பொதுத் தேர்தலின் போது இருந்ததைவிட, இன்று எல்லாத்துறைகளிலும், காங்கிரஸ், கேடு தருவதாக இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

சிறையிலே தள்ளிச் சித்திரவதை செய்வதிலும், தெருவில் செல்வோரைத் துரத்தித் துரத்தி அடிப்பதிலும், மிரண்டு ஓடுவோரைச் சுட்டுக் கொல்வதிலும், காங்கிரஸ் பயங்கரமான பயிற்சி பெற்றுவிட்டிருப்பது காண்கிறோம்.

இன்று எந்த இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம், ஊரடங்கு சட்டம், எந்த இடத்தில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டனர் என்று வெளியிடப்பட்டிருக்கிறதோ என்ற பயத்துடன்தான், நாளிதழ்களைப் பிரித்துப் படிக்க வேண்டி இருக்கிறது.

சென்ற பொதுத் தேர்தலின் போது, காங்கிரசாட்சியினுல் விழுந்தபிணங்களின் எண்ணிக்கையைக் கூறினேம்—இந்தத் தடவை கூறும்போது, முன்பு எவ்வளவோ மேல் என்று சொல்லத்தக்கவிதமாகத்தான இப்போதைய ஆட்சி அலங்கோலம் இருக்கிறது.

மக்களின் 'வாழ்வு' முன்பு இருந்ததைவிட இப்போது மோசமாகி இருக்கிறது.

தொழில் வளம் — தென்னுட்டைப் பொறுத்தமட்டில், இந்த ஐந்தாண்டுகளில் எந்த விதத்திலும் வளர்ச்சி அடையவில்லை.

இதனைச் சிற்சில சமயங்களில், காங்கிரஸ் அமைச்சர்களே கூறி அழுகிருர்கள்.

இவை எதனையும் மறுத்திடவுமில்லை. ஆனுலும், காமராஜர் நல்லவர், அவர் மறுபடியும் ஆட்சி புரிய வேண்டும், ஆகவே அவருடைய வெற்றிக்காகத்தான் வேலை செய்யப்போகிறோம், அவர் வெற்றிபெறுவது. தமிழர்களுக்கு ஒரு 'வரப்பிரசாதம்' என்று எண்ணுகிறோம், என்பதாகக் கூறுகிருர்களே, இவர்களேதான் ஆயிரம் ஐந்து ரூபாய் என்று போஸ்டர் போட்டு நாட்டவருக்குக் கொடுத்தார்கள்.

இப்போது ஒருசமயம், காங்கிரசை மறவாதீர்கள்! ஓட்டுகளைக் குவியுங்கள்! — என்று போஸ்டர் போடவேண்டிய நிலைமை வருகிறதோ, அல்லது

நாடு வாழ மாடு வேண்டும்
மக்கள் ஓட்டு மாட்டுப் பெட்டிக்கே!

காளைமாட்டுப் பெட்டி
காமராஜர் வைக்கும் பெட்டி

என்று விதவிதமான போஸ்டர்கள், பச்சை, நீலம், ஊதா கலர்களில் வெளியிட்டு விற்பனைக்குத் தரப்படுமோ என்னமோ, யார் கண்டார்கள்!

இல்லை, அண்ணு! அப்படி எல்லாம் போடமாட்டார்கள், கூச்சமாக இருக்குமல்லவா, வேண்டுமானுல், நம்மீது உள்ள வெறுப்பைக் காட்டுகிற முறையில்

கண்ணீர்த்துளிக்கு வேட்டு
காமராஜருக்கே ஓட்டு

என்று வெளியிடக்கூடும் — அல்லது இன்னமும் இழிமொழி அழகுடன் வெளியிடக்கூடும் என்று கூறுவாய்; எவ்விதமான முறையைக் கையாண்டாலும், தம்பி, நாடும் நாமும், காங்கிரஸ் குறித்து, பெரியார் கொண்டுள்ள கருத்து என்ன என்பதை எப்படி மறந்துவிடமுடியும்.

அவர் என்ன, பட்டும் படாததுமாகவா, கூறியிருக்கிருர்.

பொறி பறக்கப்பறக்கப் பேசி இருக்கிருர் — பசுமரத்தாணி போலல்லவா பதிந்திருக்கிறது.

நான் கூடச் சில வேளைகளில், என் வீணை தொல்லை, சஞ்சலம், சங்கடம், சிக்கல் — காங்கிரசே

வந்து தொலைந்து போகட்டுமே, நமக்கென்னவென்று இருந்துவிடுவோமே, நாம் எதற்கு வாபுதனை விலைகொடுத்து வாங்குவதுபோல, தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்று இடர்ப்படவேண்டும், என்று சலிப்புடன் எண்ணிக்கொள்வதுண்டு. ஆனால் அடுத்த கணமே அவருடைய உருவம் தோன்றும் மனக்கண்முன்பு, 'அடே அறிவிலி! எவ்வளவு இடித்திடித்துக் கூறினேன் — எத்துணை அருமையான காரணம் காட்டினேன், காங்கிரஸ், ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்று; இவ்வளவும் கேட்டுவிட்டு, இனியும் இளித்தவாயனாவதா! காங்கிரசை எதிர்த்து நிற்கும் ஆற்றலை எவ்வளவு தந்தேன்— எங்கே போயிற்று அந்த ஆற்றல்! விழலுக்கு இறைத்த நீராயிற்று என் அறிவுரை விளக்கம்!" என்று கேட்டுக் கேலிசெய்கிறதே, என் செய்வேன்? இதோ கேளேன், தம்பி, ஒரு விளக்கம்—அவர் அருளியது:

> **"காங்கிரஸ் ஒழிந்த ஒரே வருடத்தில் பட்டினி என்று பரதவிக்கும் பாமர மக்களைப் பார்க்கவே முடியாதே! கஞ்சியின்றிப் பிச்சை எடுத்துத் திரியும் தொழிலாள நெசவாளி மக்களைக் காண முடியாதே!"**

என்னென்ன இன்ப அலைகள் நெஞ்சில் கிளம்புகிறது, இந்த அரசியல் விளக்கம் கேட்கும்போது.

> **பாமரன் பட்டினி கிடக்கமாட்டான். பாட்டாளிக்குத் துன்பம் இல்லை!**

இதைவிட 'வெற்றி' வேறு என்ன காணமுடியும்?

இந்த இன்ப நாள் காணக் காங்கிரஸ் ஒழியவேண்டும், என்கிறார்— காங்கிரஸ் ஒழிந்த ஒரே வருடத்திலே, இந்த இன்பநிலை ஏற்படும் என்று கூறுகிறார்.

இதை எண்ணத்தில் பதிய வைத்துக் கொண்டான பிறகு, காங்கிரசை எதிர்க்காமலிருக்க முடிகிறதா!! உன்னாலும் என்னாலும் முடியவில்லை!! காமராஜர் நல்லவர், ஆகவே, இப்போதைக்கு, காங்கிரஸ் ஒழிப்பு வேலையை நிறுத்தி வைக்கலாம் என்று வாதிட முடிகிறது அவர்களால். நமக்கோ அந்த வாதம், மயக்கமளிக்கிறது.

காரணம் காட்டும்போது, கசடனே! நீ, பழங்காலப் பேச்சையே, புட்டுப்புட்டுக் காட்டிக்கொண்டு கிடக்கிறாயே, சரியாகுமா? நல்லவர் நம்மவர் என்று பெரியாரால் பரிவுடன் அழைக்கப்படும் பேறு பெற்றவர், காமராஜர், ஆட்சி புரியக்கண்டு உளம் மகிழ்ந்தோம், அவருடைய ஆட்சித் திறமையால் ஏற்பட்ட நன்மைகள் பலப்பல, மறுபடியும் அவர் ஆட்சி ஏற்படின் இன்னும் எண்ணற்ற நன்மைகள் கிடைத்திடும்—எனவேதான், இப்போது 'புதிய போர்முறை' வகுத்திருக்கிறோம்—நீ சுத்தக் 'கர்நாடகமாக' இருக்கிறாயே, எப்போதோ அவர் சொன்ன அந்தப் பழைய விஷயத்தைக் கிளறிக்கொண்டிருக்கிறாயே, இப்போது புதிய நிலைமை, புதிய காரணம், எனவே புதிய முறை, இதனைப் புரிந்துகொள் என்று சிலர் கூறிடக் கேட்டிருப்பாய்.

காரணம் என்ன கூறப்பட்டாலும், கடமையிலிருந்து துளியும் தவருதே! துரோகம் இழைக்காதே!—என்று பெரியார் எச்சரித்திருக்கிறார் — மிகுந்த கோபத்துடன், சாபமிடுவதுபோலப் பேசியிருக்கிறார்—அது என் நினைவிலே நின்று, வாட்டுகிறது, வதைக்கிறது, தவறி நடக்காதே என்று எச்சரிக்கை செய்கிறதே, நான் என்ன செய்யமுடியும்.

நாட்டுக்குத் துரோகம் திராவிட மக்களுக்குத் துரோகம்

தகப்பன், தாய், பெண்டு பிள்ளைக்குச்செய்யும் தீங்கு

எது? காங்கிரசுக்கு யாராவது ஒரு ஓட்டு போடுவார்களானாலும் கூட இத்தனை 'பாபமும்'பற்றிக்கொள்ளும் என்று பெரியார் கூறியிருக்கிறார்.

காரணம் கூறினால், போதாது என்கிறார்.

ஒரு ஓட்டுப்போட்டாலும் கெட்டுவிடும் காரியம்—துரோகிப் பட்டியலில் உன் பெயர் இடம்பெற்றுவிடும் என்கிறார்.

அவர் கூறும் அறிவுரை முழுவதையும், கேள், தம்பி, கேள்.

> **"ஒவ்வொருவரும் எந்தக் காரணத்தைமுன்னிட்டும் காங்கிரஸ் பெட்டியில் ஓட்டு போடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமை. இதை மறந்து யாராவது ஒரு ஓட்டுக் கூட போடுவார்களானால் அது இந்த நாட்டுக்குச் செய்த துரோகம் மாத்திரமல்ல, திராவிட மக்களுக்குச் செய்கிற துரோகம் மாத்திரமல்ல, ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தன் தகப்பன் தாய், பெண்டு பிள்ளைகளுக்குச் செய்யும் பெருந் தீங்கு"**

இவ்வளவு கடுமையாக அவர் எச்சரித்திருக்கும்போது, காமராஜர் நல்லவர் என்று ஒரு காரணம் காட்டி, காங்கிரசை எதிர்க்காமலிருக்க வேண்டும் என்று எப்படித் தம்பி, நான் உனக்குக் கூறமுடியும் — நாடு நகைக்காதா? நல்லோர் கைகொட்டிச் சிரிக்க மாட்டார்களா?

நாட்டு மக்களிலே, பொது நல நோக்கமற்றோர் சிலர், காங்கிரசைச் சுயநலம் கருதி ஆதரித்து மீண்டும் காங்கிரசாட்சி ஏற்பட வழி செய்து விடுவார்களோ என்ற கவலை கலக்கும் நிலையில், பெரியார், அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், அது நாட்டுக்கு எத்துணை பெரிய நாசம் என்பதை எடுத்துரைத்திருக்கிறார்— தம்பி—கேட்டால் நடுக்கம் பிறக்கும் உனக்கு — காங்கிரசாட்சியை எதிர்த்திட கல்லுருவும் உயிர்பெற்று எழத் துணியும் என்றுகூட, கற்பனை அலங்காரத்துடன் பேசுவாய்.

> **"நம்மைப் பொறுத்தமட்டில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆதிக்கத்திற்கு வருவதைவிட உலகப் போர் வந்து, இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் அணுகுண்டுக்கு இரையாகி மடிவதே சிறந்த முடிவு என்போம். சித்திரவதையைக் காட்டிலும் திடீர் மரணம் மேலானதல்லவா?"**

சித்திரவதை! — காங்கிரசாட்சி மீண்டும் ஏற்படுவது, மரணத்தினும் கொடியது என்றாலும்,

(15-ம் பக்கம் பார்க்க)

மூன்றும் முப்பதும்!

[அரங்கண்ணல்]

"அல்லாவின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறோம்! ஆபத்து எனில், உயிர், துரும்பு எமக்கு. ஒருபோதும் விட்டுக்கொடோம்" என்று ஆண்கள் மட்டுமல்ல. 'பர்தா' அணிந்துலவும் பழக்கமுள்ள மாதர் திலகங்களும் மசூதிகளிலே நின்று, சபதம் எடுத்துக்கொள்ளுகின்றனராம்! குமரர்கள் குருதி கொட்டுவோம் என்கின்றனர் —வயோதிகர், போகின்ற உயிர் இப்படியாவது போகட்டுமே என்று கூறுகின்றனர்—ஆலைத்தொழிலாளி, விவசாயி, அனைவரும் தோள்தட்டி துந்துபி முழக்குகின்றனர்!!

பிரிட்டிஷ் கப்பல்கள் புறப்பட்டுவிட்டன—பிரான்சும் உதவியளிக்கப் போகிறதாம் — அமெரிக்கா நிச்சயம் கைகொடுக்கும் — அணுகுண்டுகளை உற்பத்திசெய்யும் நாடன்றோ அது, என்று கூறப்படும் செய்திகள் கேட்டும் சிம்மநாதம் குறையவில்லை.

"அணுகுண்டும் போரும் என்ன செய்யும்எம்மை! அழிக்கும். அவ்வளவுதானே. அப்படி, எமது எழில்மிகு பூமியாம் எகிப்து அழியுமானால், அருகேயிருக்கும் எமது இஸ்லாமிய நாடுகளும் எம்மோடு பஸ்மமாகத்தயங்கா. உலகிலேயே பெரிய கூட்டமான எங்களை அழித்து, அவர்கள் ஆதிக்கத்தை வேண்டுமானால் நிலைநாட்டிக்கொள்ளட்டும்" என்று கர்ச்சனை கிளம்புகிறது.

கர்னல் நாசர், கட்டளை பிறப்பிக்கக் கூடவேண்டாம், கண்ஜாடை காட்டினாலே போதும் என்கிற அளவுக்கு, எகிப்திலே தேசிய எழுச்சி உருப்பெற்றிருக்கிறது.

இலண்டனிலே, உலக வல்லரசுகள் யாவும ஒன்று கூடி ஆலோசித்து நாசரை நோக்கிச் செல்லுகின்றன, திட்டங்கள் தீட்டிக்கொண்டு! உட்கார்ந்த இடத்திலிருந்தபடி உலகம் தன்னை நோக்கி ஓடிவருமளவுக்குப் பிரக்யாதி பெற்றுவிட்டார். நாசர்!

சூயஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கினார். பிரச்னை இன்று பெரிதாகிவிட்டது.

நாசரின் துணிவையும், ஆதிக்கக்காரர்களை எதிர்த்து நிற்கும் தைரியத்தையும் பற்றி இங்குள்ள நமது ஏடுகள் கூட, பாராட்டிப் பரவசமடைகின்றன.

சூயஸ் சால்வாய் பிரச்னையில் நாசர் ஏன் தலையிட நேர்ந்தது என்பது பலருக்கு, வளர்ந்துள்ள பரபரப்பில் மறந்திருக்கக்கூடும்.

நைல்நதி மீது பலகோடி ரூபாய்கள் செலவில் கட்டப்பட இருந்த அசுவான் அணைக்கட்டுக்குப் பணவுதவி செய்வதாக வாக்களித்திருந்த அமெரிக்காவும், பிரிட்டனும் மறுத்தன! நாசர், ரஷ்யாவுடனும், டிட்டோவுடனும் அதிக நட்பு கொள்கிறார் என்கிற ஒரே காரணத்துக்காக திடீரென மறுத்தன.

பணமோ, கோடி கோடியாகத் தேவை! சீமான்களின் செல்வ புரியாம் அமெரிக்காவோ, மிரட்டுகிறது–பிரிட்டனும் அதைப் பின்பற்றுகிறது–பணத்தைப் பெரிதெனக் கருதினால், தன்மானத்தை இழக்க நேரிடும். பிறகு, அவர்கள் ஆட்டுகிற பொம்மையாக வாழவேண்டுமேயன்றி, குடியரசு எனும் பெயர் ஏட்டளவில்தான் நிற்கும்!

எனவே, என்ன செய்வது? எப்படிப் பணம் தேடுவது!

வரிகள் போட்டு மக்களை வதைக்க முடியாது–கடன்கேட்டு பணம் வாங்கவும் இயலாது. மக்களிடம் போய் நிலைமையைச் சொன்னால், வறுமையுள்ள வயிற்றினைத்தான் அவர்கள் காட்டுவரேயன்றி, பொக்கிஷம் எதுவும் இல்லை அவர்களிடம்! மன்னன் பரூக்கின் காலத்தில் மடிப்பிச்சை எடுக்கும் அளவுக்கு அவதிப்பட்ட மக்கள்தானிருப்பவர்கள்!

இந்நிலையில், என்ன செய்வது?— என்று ஆலோசித்தபோது, ஒரே ஒரு மார்க்கம்தான் நாசருக்குத் தெரிந்தது! அதுதான் சூயஸ்!

அந்நியக் கம்பெனிகள், சூயசை ஆக்கிரமித்துக்கொண்டு, போக்குவரத்து மூலம் ஏராளமான லாபம் சம்பாதித்து வந்தன. பெரும் பங்கு பெறும் நிலைபெற்றது, பிரிட்டன்!

அங்கு போகும், அந்த லாபம் எகிப்தின் களஞ்சியத்துக்கு வந்தால் ......?

கேள்வி கிளம்பிற்று நாசரின் இதயத்திலிருந்து! உத்தரவும், பிறப்பிக்கப்பட்டது—உறுமிய அமெரிக்காவும், அதட்டிய பிரிட்டனும் இன்று அஞ்சிடுமளவுக்குப் பிரச்னை பெரிதாக உள்ளது.

உலகையே நிலைகலக்குமளவுக்கு நடவடிக்கை எடுக்க நாசருக்கிருந்த தைரியமெல்லாம், படையா? அல்ல. பணமா? கிடையாது. பலமா? இல்லை.

ஒரே ஒரு காரணம், தன்னிடம் நீதியுள்ளது, தான் செய்வது சரி, தன்னுடைய நாட்டிலுள்ள மூன்று கோடி மக்களும் தனக்குப் பின்னால் பக்கபலமாக நிற்பார்கள் என்கிற நம்பிக்கை தான்.

அந்த நம்பிக்கை நசித்துவிடவில்லை!

எகிப்து ஒரு பக்கம் — வல்லரசுகளிலே வல்லூறுகளாயிருப்பவர்கள் எல்லாம் இன்னொரு பக்கம்.

அணுக்குண்டு பணக்குண்டு ஆகியவைகளை வைத்திருக்கும் அமெரிக்கா முதல், அறிஞர்களையும் நிபுணர்களையும் பெற்றிருக்கும் பிரிட்டன் அதனுடைய பின்னோடிகளான நாடுகள் யாவும், எகிப்தைப் பார்க்கின்றன! எகிப்து நாடோ, ஏக்கமுத்தும் பீடுநடையும் கொண்டு அவர்களை ஏறெடுத்துப் பார்க்கிறது!

தேசத்துக்கு ஆபத்து என்றதும் தேசிய எழுச்சியினைக் காண்கிறோம் அங்கே.

நாசர், நாட்டின் மானத்தைக்காக்க முனைகிறார்.

நாட்டுக்கு உரிமையான ஒரு துறையை அந்நியப் பிடியிலிருந்து பெற்றுத் தர முயல்கிறார்.

அதனால்தான் குமரர் முதல் வயோதிகர்வரை, பெண்கள் முதல் மாணவர்கள்வரை வீரமுழக்கம் செய்யக் கேட்கிறோம்.

*

எகிப்து, அண்மையில் குடியரசாகிய நாடு!

இந்தியாவோ, குடியரசாகி ஒன்பதாண்டுகளாகிவிட்டன.

மூன்று கோடி மக்களைக் கொண்டது எகிப்து.

முப்பதுகோடி மக்களைக் கொண்டது இந்தியா.

இங்கே, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்துக்கு 800-கோடி ரூபாய் இன்னும் தேவைப்படுகிறதாம்.

நாட்டிலுள்ள சகலவ்ருமான வழிகளையும் சுரண்டிய பின்னும் இந்தத் தொகை தேவைப்படுகிறதாம்!

அமெரிக்காவை முன்புபோலக் கேட்கும் நிலை இல்லை. ஏனெனில் அங்கேயே, இந்தியாவுக்குக் கடன் கொடுக்கலாமா கூடாதா என்பது அடிக்கடி ஒரு பிரச்னையாகிவருகிறது. அதுவும், ரஷ்யாவுடன் நேருவுக்குப் புதுத் தொடர்பு ஏற்பட்டதுமுதல், அச்சமும் ஐயமும் அதிகமாகிக்கிடக்கிறது. வாக்களித்துள்ள தொகைகள், வந்தால் போதும் என்கிற நிலை.

இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வது?—என்று கலங்கிய டில்லி, தன்னுடைய சர்க்காரில் வேலை பார்க்கும் பி. கே. நேரு என்பவரைப் பிடித்து வெளி நாடுகளுக்கு அனுப்பிற்று, பிரான்சில் கிடைக்குமா, ஜெர்மனி தருமா, ஸ்விட்சர்லாந்து உதவுமா, பெல்ஜியம் வழங்குமா, டச்சு கொடுக்குமா, பிரிட்டனில் கிட்டுமா, என்று கண்டறிந்து வருமாறு.

சென்றவர் திரும்பி விட்டார்! ஐரோப்பிய நாடுகளில் கடன் கிடைக்கும்—800 கோடி வாங்கி விடலாம்—கொடுக்கவும் அவைகள் தயாராக உள்ளன — ஆனல் வட்டி விகிதம் தான் அதிகமாகக் கேட்கிருர்கள், என்று தெரிவிக்கிருர்!!

ஒன்பது சத விகிதம் வட்டி கேட்கிருர்களாம், கடன் கொடுக்க.

அமெரிக்காவிலிருந்தும் சர்வ தேசப் பாங்கியினின்றும் அடிக்கடி இந்தியா கடன் வாங்குகிறதல்லவா, அதற்கு மூன்று சதவிகிதம் வட்டி செலுத்தி வருகிறது, இந்தியா. ஐரோப்பிய நாடுகளோ, ஒன்பது சத விகிதம் கேட்கிறதாம்!

பி. கே. நேரு கண்டறிந்து வந்த இந்தச் சேதி கேட்டு, கவலையிலாழ்ந்துள்ளதாம், டில்லி.

"பயப்படாமல் யாரும் கடன்கொடுக்கலாம்! 800 கோடி போய்விடும் என்று பயப்பட வேண்டாம். எங்களுக்கே 800 கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது. இங்கிலாந்தில் ஸ்டர்லிங்கடன் என்கிற பெயரால் இத்தொகையிருக்கிறது. மொத்தமாக ஒரே சமயத்தில் இத் தொகை கிடைக்காதே என்பதால்தான் கேட்கிருர்கள். கொடுக்கலாம்," என்று டில்லி தன்னுடைய 'பீரங்கி'களைக் கொண்டு பேசச் செய்கிறது.

நிபுணர் மகலானேபினஸ், என்பார் இந்த கிழமை கல்கத்தாவில் இதனை எடுத்துரைத்திருக்கிருர்.

*

ஒன்பது சதவிகிதம் வட்டி கொடுத்தாவது, தன்னுடைய பிரக்யாதியைப் பிரகடனப்படுத்தியாவது, அந்நிய நாடுகளில் "கடன்" வாங்கும் 'தாகம்' அதிகமுள்ளதே ஒழிய, நாசரின் வழியைப் பின்பற்றும் ஆசையும் ஆர்வமும் இல்லை நேருவுக்கு!

நாசரின் செயல் கெடுமதியல்ல, நாட்டின் மானத்தைக்காக்கும் மாண்புடைய செயல் என்பதை நேரும் முழக்குகிருர்.

சூயஸ் — எகிப்தின் உரிமைப் பொருள். அதனை, மறுத்திட, எவருக்கே துணிவுண்டு, என்று தட்டிக் கேட்கிருர்.

இலண்டன் மாநாட்டுக்கு கிருஷ்ண மேனனை அனுப்பி, இதனை எடுத்துரைக்கவும் தவறவில்லை.

ஆனல், தன்னுடைய நாட்டையோ பிச்சைபாத்திரம் ஏந்தச் சொல்லுகிருர். தானும் ஏந்திக்கொண்டு சிபாரிசுகள் பிடிக்கிருர்.

எகிப்தைப்போல, பாலைவனம் நிரம்பிய பகுதியல்ல, இந்தியா. முப்பது கோடி மக்களைக்கொண்ட பெருமபூபாகம். இதன் அகண்ட நிலப்பரப்பில் கனிகுலுங்கும்சோலைகள் உண்டு, தங்கமும் நிலக்கரியும், இரும்பும் எண்ணெயும், கிடைக்கக் கூடிய ஏராளமான இடங்கள் உண்டு. காடுகளும் காசுதரும் மலைகளும், பணம் கொட்டும்!

ஆனல் அந்த இடங்களெல்லாம், குடியரசு மலர்ந்து ஆண்டுகள் ஒன்பதாகியும் இன்னும் வெளியார் வசமே உள்ளன.

அப்படி வெளியார் வசமிருக்கும் இவைகளில் மட்டும் . 800 கோடி ரூபாய் முதலீடு இருக்கிறதாம்! ஆண்டு தோறும் 400 கோடி ரூபாய் லாபமாகக் கொண்டு செல்லப்படுகிறதாம்!

இரண்டாண்டுகளுக்கு முன்பு இது பற்றி தீவிர ஆராய்ச்சி செய்தேன்—மனம் 'திக்' என்றது-இதற்குத்தான, கண்ணீரும் செந்நீரும் சிந்தி சுயராஜ்யம் அடைந்தோம் என்று துயரத்துடன் கேட்கிருர், டாக்டர் லோகியா.

எல்லாத் துறைகளும்கூட வேண்டாம், தேயிலைத் தோட்டங்களில் மட்டும் ஆண்டொன்றுக்கு நூறுகோடி லாபம் வருகிறதாம்! அத்தனையும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குப் போகிறதாம்!

"இரண்டாண்டுகளுக்கு முன்பு, இதுபற்றிய விபரங்களையெல்லாம் கணக்கெடுத்தேன். இந்தியாவிலுள்ள தேயிலைத் தோட்டங்களிலிருந்து மட்டும் அந்நியக் கம்பெனிகள் ஆண்டு தோறும் நூறு கோடி ரூபாய் லாபம் பெறுகின்றன. அவைகள், இந்தத் தேயிலைத் தோட்டங்களில் எவ்வளவு முதலீடு போட்டிருக்கிருர்கள் என்று பார்த்தேன். இருபதிலிருந்து முப்பது கோடி ரூபாய்க்குள் இருப்பதாகத் தெரிந்தது"

முப்பது கோடி ரூபாய் முதல்! அதற்கு ஆண்டு தோறும் வரும் லாபம் நூறு கோடி!!

தேயிலைத் தொழிலில் மட்டும் இது; மற்ற தொழில்களையும் கணக்கெடுத்துப் பார்த்ததில் ஆண்டொன்றுக்கு 400 கோடி ரூபாய் லாபம் கிடைக்கிறது; ஆனல் அதெல்லாம் அந்நியக் கம்பெனிக்குப் போகிறது என்கிருர், லோகியா!!

இந்தத் தொழில்களையெல்லாம் தேசியமயமாக்கினல், ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இவர்கள் 9 சதவிகிதம் வட்டி கொடுத்து வாங்க விரும்பும் 800 கோடியென்ன 2000கோடி ரூபாய் கிடைக்குமே! தேயிலைத் தோட்டங்களிலிருந்துமட்டும் 500 கோடி வருமே!

ஏன், நேரு சர்க்கார், செய்யக் கூடாது?

நாசருக்கு ஆலோசனை கூறவும் சூயஸிலுள்ள நீதி அநீதிகளைப் பரிசீலனை செய்யவும், ஆற்றலையும் நேரத்தையும் செலவழிக்கும் டில்லி, ஏன் இத்துறையில் கவனம் செலுத்தக் கூடாது?

அந்நிய நாடுகள் தமது இரதகஜ துரகபதாதிகளுடன் பாய்ந்துவிடும் என்று பயப்படுகிருர்களா!

அப்படி வந்தாலும் அஞ்சோம் என்று மார் தட்டிச் சொல்லுகிறதே மூன்றே மூன்று கோடி மக்களைக் கொண்டிருக்கும் எகிப்து! இந்திய உபகண்டத்தில் இருப்போர் முப்பது கோடியாயிற்றே!

ஏன் அவ்வண்ணம் செய்வதை விடுத்து 9-சதவிகிதம் வட்டிகொடுத்தாவது கடன் வாங்க அலைய வேண்டும்.

அழகா, இது! அறமாகுமா, ஏன் அஞ்சுகிருர் நேரு,என நம்போன்ருர் எடுத்துச் சொன்னலும் எரிச்சல் கொள்கிருரே அன்றி, ஏற்க ஏன் மனம்வருவதில்லை.

கண்முன் காண்கிருேம் கர்ச்சிக்கும் நாசரை. நேருவோ, பிச்சை பாத்திரம் தூக்குகிருரே ஒழிய, அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்க அஞ்சுகிருர்.

அதே சமயத்தில், பேசாமலாவது இருக்கிருராஎனில்இல்லை, வெளிநாடுகளுக்குப் போதனைகள் புரியவும் ஆங்காங்கே உள்ள அந்நிய ஆக்கிரமிப்புகளை அகற்ற யோசனைகள் கூறவும் கிளம்புகிருர். இங்கோ, கடன் வாங்கும் காட்சி. மானம் விலைக்கூறப்படுகிறது.

மூன்றுகோடி மக்களைக் கொண்ட எகிப்தால், மார்தட்ட முடிகிறது.

முப்பது கோடி மக்களிருந்தும், முடியவில்லை, இங்கு.

காரணம், அவர் நாசர், இவர் நேரு — என்பதைத் தவிர, வேறென்ன கூறுவது.

★

முகப்பில்......

ஆப்கானிஸ்தான்

"ஆப்கன் மன்னருடைய அன்பழைப்பு பெற்று, ஒரு கிழமை அங்கு தங்கி அளவளாவி இருந்தேன். பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையே நேசமும் பாசமும் ஏற்பட வழி பிறந்தது" என்று பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் ஜெனரல் இஸ்காந்தர்மிர்சா பெருமிதத்துடன் கூறுகிருர்.

சென்ற ஆண்டு, பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் ஏற்பட்ட மோதுதல், போர் அளவுக்குச் சென்று விடுமோ என்று அஞ்சத்தக்க நிலையில் இருந்தது. இரு நாடுகளும், கொடிகளைக் கொளுத்திப் பகையைக் கக்கிக் கொண்டன. சமரசம் காணச் சவுதி அரேபிய மன்னர் முயன்று பார்த்தார்; ஆப்கானிஸ்தான் ஒரு ஏற்பாட்டுக்கு இணங்கினுல் பாகிஸ்தான் அதற்கு இணங்கிட மறுக்கும். மிகச் சிரமப்பட்டு, போர் தவிர்க்கப்பட்டது.

அண்டை நாடாகவும் இஸ்லாமிய நாடாகவும் இருந்தும், ஆப்கானிஸ்தானுக்குப் பாகிஸ்தானிடம் நேசம் ஏற்படாமலிருந்தது; மிர்சா இப்போது இரு நாடுகளுக்கும் நேசம் ஏற்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் கூறுகிருர்.

பக்தூனிஸ்தான் பிரச்சினை இரு நாடுகளுக்குமிடையில் மனமாச்சரியத்தை மூட்டுகிறது.

பக்தூன்களுக்கு ஆப்கனிஸ்தான் பரிவுகாட்டுகிறது; தனி அரசு கேட்கும் பக்தூன்கள்மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கும் போக்கைக் கண்டிக்கிறது—தகராறு இரு நாடுகளுக்கும் இதனுல் எழுகிறது.

இஸ்காந்தர்மிர்சா இந்தப் பிரச்சினைக்கு என்ன முடிவு கண்டார் என்பது விளக்கப்படவில்லை.

ஒரு பாதி மலைகள்—மறுபாதி மணற்பாலை! ஆம், ஆப்கானிஸ்தானம் பெற்ற வளம் இவைதான். விளை நிலங்களோ, தொழில் வகைகளோ அற்றதொரு நாடுதான். மழை — இன்னது என்று தெரியுமே ஒழிய, அதனுல் பயன் உண்டு என்பதனை உணர வகையில்லை. ஆனுலும் அங்கும் மனிதவாழ்க்கை நடைபெறுகின்றது — ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக.

மாவீரன் அலெக்ஸாந்தர், செங்கிஸ்கான், தைமூர் என்றுவரும் வரிசையிலுள்ள எல்லா வீரர்களும் தங்கள் வாள் ஆற்றல் காட்டிட இந்தியத் துணைக்கண்டத்திற்கு வந்தது இந்த வழியாகத்தான்.

உருசியா, பாகிஸ்தானம், ஈரான் இவை சூழ்ந்த நாடு ஆப்கானிஸ்தானம். பரப்பில் 92-சதவிகிதம் வரண்ட பாழ்நிலம்.

வற்ருத பெருநதிகள், அவை தரும் நிதிகள், வளமான மண், வாழ வகை காட்டும் கடல், இவை இருந்தும், காணுக் கண்ணராகி 'திராவிடம் பிரிந்தால் வாழுமா?' என்று கேட்டிடுவோர் வாயடைத்திட வகைகாட்டுவது ஆப்கன் நாடு.

தொட்டவுடன் ஊறும் மணற்கேணிகள் இங்கு; ஆனுல் அங்கு தோண்ட வேண்டிய ஆழமே 70-அடிகள். அதற்குப் பின்னர் கிடைக்கும் நீர்கொண்டுசெல்லப்பட வேண்டிய தூரம் சில இடங்களில் 20-மைல்கள் — அதுவும் தரைக்கு அடியில் 20-மைல்கள் சுரங்கப் பாதை வெட்டினுல்தான் தண்ணீர்! இந்த ஆபத்தான நிலைமைக்காக அஞ்சி ஓடவிடவில்லை அவர்கள்; 5000 ஆண்டுகளாக வாழ்வு நடந்துகொண்டுதான் இருக்கிறது.

உயர்ந்த தோற்றம், நிமிர்ந்த பார்வை, அஞ்சாத நெஞ்சம், அசைவிலாத ஊக்கம் இவை ஆப்கன் மக்கள் பெற்றுள்ள செல்வங்கள். கொளுத்தும் வெயிலிலும் ஒன்றின்மீது ஒன்ருக ஆடைகள் —அதிலும் பகட்டான ஆடைகள் அணிவதில் அவர்களுக்கு மிக்க விருப்பம்.

நாள் எல்லாம் உழைத்து அலுத்து 'இல்லை'யோடு உறவு கொண்டவன் என்ருலும், செல்வச் சீமானிடம் இருக்கவேண்டிய அளவிற்கு இருக்கின்றதல்லவா விருந்து ஓம்பும் பண்பு ஏழையிடம்! அதுபோல் நாட்டு மக்கள் வாழ்க்கைக்கே வளம் குறைவு, வகை இல்லை என்ருலும் வருவிருந்து புரக்கும் தன்மை அவர்களிடம் மிகுதி. சிறந்த உணவும், ஆடம்பரமான கேளிக்கையும் — ஆடலும் பாடலும் கலந்த உபசாரம், விருந்தினர்க்கு அங்கு வேண்டிய அளவு உண்டு என்கின்றனர்.

அங்கு ஆணுகப் பிறந்தவன் பெற்ற உரிமை பெரிது; ஆனுல் பெண்ணுகப் பிறந்துவிட்டாலோ படவேண்டிய துயரம் எடுத்தெழுத இயலாததாகும்.

ஆப்கனிஸ்தானில், சமுதாய அமைப்பில், புரட்சிகரமான மாறுதலைச் செய்ய முனைந்தார், அமானுல்லா; பிற்போக்கைப் பெருநெறியென்றும், பழைமையைப் புனித ஏற்பாடு என்றும் எண்ணிக் கிடக்கும் வைதிகக் கூட்டம் அமானுல்லாவை, அரசப் பதவியிலிருந்தே விரட்டிவிட்டது; ஆப்கன் நாட்டைத் துறந்து வெளிநாடு சென்ருர் அமானுல்லா; மன்னரைவீழ்த்தக் கிளம்பிய வெறிச் செயலின்போது பாச்சாசாக்கோ எனும் ஒரு தேனீர் விற்போன் அரசனுகச் சில நாள் தர்பார் நடத்த முடிந்தது!

பெண்ணின் வளர்ச்சி, மகிழ்ச்சி வாழ்க்கை எல்லாம் 'படுதா'விற்குள்தான் நடைபெற வேண்டும்.

நாட்டின் வடபகுதி வெறும் மலை முகடுகள்; அவையும் வளம் அறியா வரண்ட குவியல்கள். தென் பகுதியோ உயிர் பருகும் பாலைவனம் — கண்ணுக் கெட்டிய தூரம், மைல் மைலாக வெறும் மணல்—உயிர்ப்பு இல்லாத மணல் —அந்த மணலிலும் ஒரு காலத்தில் மாடகூடங்களும், அரண்மனைகளும் இருந்தன என்பதற்கு அறிகுறிபோல் ஆங்காங்கே பாழ்

இடங்களும் பழைய மதிலின் பகுதிகளும் இன்றும் காணப்படுகின்றன. சிதைந்துகிடக்கும் சின்னங்கள் அங்கு ஒரு காலத்தில் செழிப்பான நகரங்கள் இருந்திருக்க வேண்டும் என்று உணர்த்துகின்றன.

ஆருயிர் மருந்தாக இருப்பது 'ஹெல்மண்ட்' என்ற நதியே. அந் நதியின் நீர் வீணாகா வண்ணம் இன்று அதில் அணை எழுப்பப்படுகின்றது.

சலியாத உழைப்பு ஆற்றல் எல்லாம் இருந்தும் ஆப்கானிஸ்தானம் சரிவர முன்னேற முடியாமல் இருப்பது, அங்கு போக்கு வரவுக்கான பாதை வசதிகள் இல்லாமைதான் என்கிறார்கள்.

திபெத்துக்கு அடுத்து ஆப்கானிஸ்தான் இருப்புப் பாதையே இல்லாத நாடாம். மேடும் பள்ளமுமான பாதையே வண்டிகளுக்கு அமைந்திருப்பன.

காபூல்! இந்தப் பெயர் சொன்னதும் தீஞ்சுவை தரும் திராட்சைக் கனி நினைவிற்கு வரும். இது ஆப்கானிஸ்தானுக்கு தலைநகரம் ஆகும். பழைமையும் புதுமையுமாகக் காணப்படும் நகரம் காபூல்.

உயர்ந்து ஓங்கிய மலைகள், உலகம் புகழும் காபூல், 'குச்சீஸ்' என்ற நாடோடி இனமும், ஆப்கனில் காணப்படும். ஒட்டகம்—பாலைவனத்தைக் கடக்கப் பயன்படும் ஒரே வாகனம்—கழுதைகள், குதிரைகள், ஆடுகள், நாய்கள், இவை சூழக் கூட்டங்கூட்டமாக இந்த மக்கள் கூட்டமும் ஆங்காங்கே அலைந்து திரியும். நிலையான வாழ்வு இவர்கள் அறியாத ஒன்று!

வளமற்ற மண்; தொல்லை தரும் இயற்கை; இந்த இக்கட்டுக்களிடையிலும் ஆப்கானிஸ்தானம் உரிமை வாழ்க்கை நடாத்த இயலுகின்றது. முன்னேற்றப் பாதையில் செல்லவும் முயலுகின்றது.

ஆனால் 'திராவிடம் பிரிந்தால் வாழுமா' என்று இன்னும் சிலர் கேட்கின்றனர்!

★

புறநானூற்றில்....

புலவர்

[மா. கி. தசரதன்]

சங்க காலத்துப் புலவர்கள் அனைவருமே சான்றோராகத்தான் வாழ்ந்தனர். கற்க வேண்டியன எல்லாம் கற்றுத் தேர்ந்து, தெளிந்த உள்ளமும், உயர்ந்த நோக்கமும்கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதனால்தான் இன்றும் இலக்கிய வானில் அவர்கள் புகழ் பரப்பி நிற்கும் முழுமதிகளாகத் திகழுகின்றனர்.

சங்ககாலப் புலவர்கள் என்று எண்ணியவுடன் அவர்களுடைய உடன்பிறப்பேபோல் என்றும் நீங்காமல் நிலைத்திருந்த வறுமைத் துன்பம் நினைவிற்கு வரும். கசடு அறக் கற்று வல்ல புலவர்களுடைய இல்லங்களில் வறுமை, நீங்கா நெடுந்தொடர்பு கொண்டிருந்ததை நினைக்கின்றதுபோது ஒருக்கால் பண்டைத் தமிழர் புலவர்களைப் போற்றத் தவறிவிட்டனரோ என நினைக்கக்கூடும். அது தவறு. புலவர்களைக் கண்டவுடன், அவர்கள் திருவாய்ப் பாடல் கேட்டவுடன் பெரும்பான்மையான புரவலர்கள் வாரி வழங்கி இருக்கின்றனர், பெரும் செல்வத்தை ஆனால் அத்துணை நன்கொடைகளைப் பெற்றதும் புலவர்கள் தாங்களும் வள்ளல்களாக மாறிவிட்டிருக்கின்றனர்.

புலவர் பெருஞ்சித்திரனாரின் இல்லம் வறுமையின் எல்லையைக் கண்டுவிட்டது. வயது முதிர்ந்து வாழ்நாளின் இறுதியை எண்ணிக் கொண்டிருந்த அவர் தாய், குழந்தைகளின் கொடும் பசிக்கு ஆறுதல் அளிக்க இயலாத இல்லக் கிழத்தி, இவர்களைக்கொண்டது அந்தக் குடும்பம். உணவுப் பொருள்கள் என்றோ தீர்ந்து விட்டன. குப்பையில் தப்பி விழுந்த விதையால் தழைத்துப் படர்ந்திருந்த கீரைச் செடியிலும் முன்னமே பலமுறை இலைபறித்தாகிவிட்டது. புதிதாக வெளிவரும் தளிரைக் கொய்து வந்து வெறும் நீரையே உலையாக ஏற்றி ஆளுக்குக் கொஞ்சம் அருந்திப் பசியாறும் அவல நிலை இருக்கிறது. குழந்தைகள் பசித்துன்பத்தினால் தவித்து வாடுகையில் வானத்து நிலவையும் வனத்துப் புலியையும் சொல்லிச் சொல்லி அந்தத் தாய் அவர்கள் நினைவை வேறுவகையில் திருப்பிட முனைகின்றாள். இதைவிட வறுமையின் கொடுமை எவ்வாறுதான் வாட்ட இயலும்?

அந்த நிலையில் குமணனிடம் பொருள் பெற்று வரும் புலவர் அந்தப் பொருளைப் பாதுகாத்து வைத்து நெடுநாள் நன்கு வாழலாம் என்று நினைக்கவில்லை. தான் அவ்வாறு நினைக்காது போயினும் எங்கே தன் மனைவி நினைந்து பொருளைப் பாதுகாத்துவிடுவாளோ என்று எண்ணி

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே

புறம் 193

எனத் தானும் கொடுக்கப் போவதைக் குறிப்பிட்டு மனை

வியையும் வள்ளல் ஆகச் சொல்லுகின்றார். மேலும் மேலும் வருவாய் வந்துகொண்டு இருக்கும்போதே வரவை மீறும் செலவு ஆயின் வறுமை வாய்த்துவிடும். இங்கே புலவரோ வருவாய் என்பதே இன்னது என்று அறியாதவர். எப்போதோ ஒருமுறை புலவர் தரும் பரிசில் பொருளையும் இவ்வாறு வாரி வழங்கினால் எவ்வாறு வல்லாங்கு வாழ இயலும்? எல்லாப் புலவர்களும் இதே வகையில்தான் வாழ்ந்தனர். எனவேதான் அனைவரும் வறுமையில் வாடினர்.

வயிற்றுக்கு உணவு இன்றிக் கிடந்தவர்கள் என்றாலும் உள்ளம் மட்டும் மிக்க உயர்ந்த நிலையில் இருந்தது. நாடாளும் மன்னனையும் மதிக்காத இறுமாப்பு அவர்களின் நெஞ்சங்களில் திகழ்ந்தது.

இல்லத்திலே இல்லாமை; பசியும் பட்டினியும். இந்த நிலையில் பொருள் கருதி ஒரு புலவர்—அந்தப் பெருஞ்சித்திரனாரே—வெளிமான் அவைக்குச் செல்லுகின்றார். வெளிமான் தம்பி இளவெளிமானைப் பரிசில் கொடுக்கச் சொன்னான். இளவெளிமான் புலவர் தன்மை அறியாதவன். பாடி வந்தவர்தானே என ஏதோ சிறு பொருள் தந்துவிட்டான்.

வறுமையிலேயே வாடிக்கிடக்கின்றது புலவர் உடல் என்றாலும் உள்ளம் மட்டும் தன்மானத்தை இழக்கவில்லை. அவன் வேந்தன் ஆயினும் ஆகுக என வெகுண்டு அப் பொருளைக் கொள்ளாது வெளியேறினார். குமணனைப் பாடிப் பரிசில்பெற்றார்; யானையைப் பரிசிலாகப் பெற்றுக் கொணர்ந்தார். இளவெளிமான் காவல் மரத்தில் அதனைக் கட்டி விட்டு அவன் அவைக்குச் சென்றார்.

> "மன்னா இரப்போரைக் காப்போன் நீயல்லை; வேறு புரவலர்களும் உளர். உன் காவல் மரத்தில் யான் யானை ஒன்றினைப் பிணித்துள்ளேன். குமணன் தந்த பரிசு மன்னா; அது பரிசு. வருகிறேன்"

என்று கூறி, அந்த யானையை ஈகை இன்பம் தெரியா இழிமகனுக்கே விட்டுச் சென்றார்.

இதே புலவர் அதியமானிடத்துச் சென்றபோது அவன் இவரைக் காணாமலே பொருள்கொடுத்தனுப்ப அதனைக் கொள்ளாது

> "என்னைக் காணாமலே எவ்வாறு தெரிந்துகொண்டானோ தெரியவில்லை. காணாமல் ஈந்த இப்பரிசிலைப் பெறுதற்கு நான் வாணிகப் பரிசிலன் அல்லேன்"

எனக் கூறி அப்பொருளைக் கொள்ளாமல் விட்டுச்சென்றிருக்கின்றார். புலமை, வாணிபம் அன்று என்று உயர்ந்த மனம் அன்று எண்ணியது.

தன்னலம் துறந்து வாழுகின்ற வாழ்க்கையே உயர்ந்தது, நல்லது என்று கூறுகிறோம். 'தனக்கென வாழாது பிறர்க்கு உரியாளன் ஆதலையே உலகம் போற்றுகின்றது. தன் மக்கள் தன் வீடு, தன் சுற்றம் எனக் கருதியவர்களைவிட உலகம், உலகத்து மக்கள் எனக் கருதித் தொண்டு மனம் கொண்டு பணிசெய்தவர்களையே உலகம் இன்றும் பாராட்டுகின்றது

பழந்தமிழ்ப் புலவர்கள் இவ்வகையிலும் இசைமிக்க வாழ்க்கையே வாழ்ந்துள்ளனர். தம்மிடம் செல்வமோ பிறவோ இல்லாதவர்கள் மற்றவர்க்கு எவ்வாறு உதவ இயலும் எனலாம். இவர்கள் உதவியது செல்வத்தின் சிறப்பால் அன்று; செந்நாவின் திறத்தால்.

பெருஞ்சித்திரனார் அனுபவித்த வறுமையின் எல்லையைக் கண்டோம். அத்தகு நிலையில் வள்ளலை நாடிவருகின்றார் புலவர்.

வந்த இடத்திலோ வருத்தம் தரும் செய்தியைக் கேட்கின்றார். வந்தார்க்கெல்லாம் வாரி வழங்கி வந்த குமணனை அவன் தம்பி காட்டுக்கு விரட்டி இருந்தான். காடு சென்ற புலவர் குமணன் நிலை கண்டு கலங்கினார். பசியால் வாடும் தன் குழந்தைகளை மறந்தார், அவர்களை ஆற்றத்தெரியாது தவிக்கும் மனைவியை மறந்தார். முற்றத்திற்கும் போக இயலாது குறுகுறு அடி இட்டு நடக்கும் தன் தாயையும் மறந்தார். அண்ணனும் தம்பியும் அமைந்து வாழவேண்டும் என நினைந்தார். தமது அறிவின் திறத்தை எல்லாம் பயன்படுத்தி அந்தச் செயலில் ஈடுபட்டார். "தலை கொண்டு செல்லுங்கள்: தம்பி கைக்கொடுங்கள்; விலை தருவான்; வறுமை தொலையும்" என்று சொன்ன குமணவள்ளலிடமிருந்து வாளைப்பெற்று, நாடு நோக்கி ஓடினார். இளங்குமணனைக் கண்டார், "பார் மன்னா பார் உன் தமையன் செயலைப் பார். தலை தந்த நிலையைப்பார்" என்று என்னென்ன கூறினாரோ எப்படி எப்படிச் சொன்னாரோ. தம் புலமை எல்லாம் பயன்படுத்தினார். அண்ணன் மீது தம்பிக்கு அன்பு பிறந்தது. பிரிந்தவர் கூடினர்.

வேறு ஒரு புலவர் கபிலர் என்பவர். வள்ளல் பாரிக்கு உற்றநண்பர். பாரியின் புகழ் கண்டு அழுக்காறு கொண்டு மூவேந்தரும் ஒருங்குடன் கூடி தானைகொண்டு தாக்கி அலைக்கழித்தனர். பாரிமேல் படை எடுத்து விளையும் பயன் ஏதும் இல்லை என்று கபிலர் பாடல் ஒன்று பாடினார்.

> "முடியுடை வேந்தரே, நீவிர் மூவிருங்கூடி வந்து எதிர்த்தாலும் பறம்பு நாடு உமக்குக் கிடைக்காது ஏன் தெரியுமா? பறம்பு நாட்டில் முந்நூறு ஊர்கள் உள்ளன. அந்த முந்நூறுஊர்களையும் உங்களுக்கு முன்னரே பரிசிலர் தங்கட்குரிய பரிசிலாகப் பெற்றுச் சென்றனர். இனி பாரியும் நானும் இருக்கிறோம்; குன்றும் இருக்கின்றது அதையும் அடைய வேண்டுமாயின் அமர் மேம்பட்டு அடைய எண்ணாதீர்."

அது இயலாது. பாடிச் செல்லுங்கள், பாரி வழங்கிவிடுவான் என்ற பொருள் அமையும், பாடலை இசைத்தார். இதைக் கேட்ட பின்னரும் ஏனோ மூவேந்தர் மனம் மாறாது முற்றுகை இட்டனர்; பகை முடித்தனர்.

வந்தார்க்கெல்லாம் வாரி வாரி வழங்கி சீரும் சிறப்பும் உற வாழ்ந்து வந்த வள்ளல் பாரியின் மக்கள் திக்கற்றவர்கள் ஆகித் திண்டாடிடும் நிலை வந்தது: அரச நிலையையும், பெற்ற தந்தையையும் இழந்து வாடும் நிலையில், உற்ற நண்பரான கபிலர் அவர்களைக் காக்கும் கடமையை மேற்கொண்டார். அந்த நிலையில் கபிலருடன் பறம்புவிட்டு இரவில் வழி நடக்

கின்றனர். இள உள்ளங்களையுடைய இள நங்கையர். எளிதில் உணர்ச்சி வயப்படக்கூடிய வயது. துன்பம் கண்டு துவண்டுவிடும் மனம். இரவு நேரத்தில் ஊரெல்லாம் அமைதியாகக் கிடக்கின்றபோது இவர்கள் மட்டும் விழித்திருக்கின்றனர். வானத்தில் முழுமதி தண்ணொளி பரப்பி உலா வந்துகொண்டு இருக்கின்றது. வானத்து நிலவைக் கண்டதும் இவர்கள் நினைவு பறந்துதிரிந்தது; கடந்த முழுமதியன்று தாங்கள் வாழ்ந்த வாழ்வையும் இந்த முழுமதியில் உற்ற தாழ்வையும் எண்ணினர். அந்தத் துன்பத்தில் அவர்கள் அழுது அரற்றவில்லை. மனம் வெதும்பி துவண்டுவிடவில்லை. துயரத்தின் துடிப்பில் தோன்றும் செயலற்ற அமைதி. அழுகையைவிட பொல்லாதது. அந்தக் கொடிய நிலையில் பாரியின் பண்புள்ளமகளிர் சென்ற முழுமதி நாளுக்கும் இந்த முழுமதி நாளுக்கும் இடையில் நடந்துவிட்ட நிகழ்ச்சிகளை எண்ணிக் கலங்குகின்றனர். சில சொற்கள் அவர்கள் வாயினின்றும் வெளிப்படுகின்றன.

> "அந்த மாதம்—அந்தவெண்ணிலவு நாளில் எம் தந்தையரும் இருந்தார். எமது குன்றும் இருந்தது. இந்த மாதம்—இந்த வெண்ணிலவு நாளில் வெற்றியை உடைய வேந்தர் எங்கள் குன்றத்தினையும் தமது ஆக்கிக்கொண்டார்கள்; யாங்கள் எங்கள் தந்தையையும் இழந்தோம்,"

என்ன அவலம் இந்தச் சிறுசொற்களில் கொஞ்ச வரிகளில் அமைந்து கிடக்கின்றது!

அத்தகைய நிலையில் கபிலர் அவர்களைக் காக்கும் கடமையை மேற்கொண்டார் என்று எண்ணிப் பார்த்தால் அவருடைய கடமை உணர்ச்சி நன்கு புலனாகும். மேற்கொண்ட கடமைக்காக, பாரிமகளிரைத் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்பதற்காகக், கபிலர் கொண்ட முயற்சிகள் பல. ஏறி இறங்கிய படிகளும் பாடிய பாடல்களும் எத்துணையோ! கண்டு பேசியவர்கள் தொகை எவ்வளவோ,

ஒருக்கால் பாரி இருந்திருந்தால் தன் மகளிர்க்காக அத்துணை முயற்சி செய்திருப்பானா என்று கூட ஐயம் பிறக்கின்றது. கொண்ட நட்புக்காக அந்த உதவிசெய்யும் பண்பு புலவர்க்கு இருந்தது.

பேகன் என்ற வள்ளல், எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்தியவன். ஏனோ தன் மனைவி கண்ணகியைத் துறந்து வாழ்ந்தான். கணவனின் புறக்கணிப்பால் கலங்கிக் கண்ணீர்க் கடலில் மூழ்கிய கண்ணகியைக்கண்ட புலவோர் அவள் துன்பம் துடைத்தல் தம் கடமை என எண்ணினர். பேகனிடம் சென்று பலவகையில் கண்ணகியைக் களிப்புறுத்துமாறு அறிவுரை பகன்றனர்.

கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலிய புலவர்கள் பாடிய பாடல்களில் கண்ணகி உற்ற துயரமும் அது துடைக்க அவர்கள் கொண்ட பெரு முயற்சியும் துலங்குகின்றது.

யாரோ பெண் ஒருத்தி படும் துயரம் என்று கண்மூடிச் செல்லாது கருத்து மூடியிருந்த மன்னனைத் திருத்தி நல்வழிப்படுத்தும் அறத் துறையில் நின்றவர்கள் புலவர் பெருமக்கள்.

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் அரசியல் சூழ்ச்சிகளிலும் வல்லவர்களாய் விளங்கினமைக்குச் சான்று பல உள.

அதியமான் நெடுமான் அஞ்சியுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்த ஔவை மூதாட்டியை அவன் தன்னுடன் பகைத்த தொண்டைமானிடம் தூது சொல்லி வர ஒருமுறை அனுப்பினான், ஔவைக்குத் தன் படைக் கலக் கொட்டிலைக் காட்டி அச்சுறுத்தி விடலாம் என எண்ணிய தொண்டைமான், ஔவையுடன் படைக் கலக் கொட்டிலுள் நுழைந்து போர்க் கருவிகளின் தொகையைக் காட்டி வந்தான். இவனுடைய உள் எண்ணத்தை உணர்ந்த மூதாட்டி "அழகு! அழகு! இந்தப் படைக்கலங்கள் மயிற்பீலி அணியப் பெற்று நெய் பூசப்பட்டு அழகாக விளங்குகின்றன. போர்த் தொழில் இல்லாத காரணத்தினால். ஆனால் எங்கள் தலைவனுடையகலங்களோ போர்க்களத்தில் பகைவரைக் த்குதும் தொழிலில் ஈடுபட்டதினால் நுனி சிதைந்தும் வளைந்தும் போயின. அவை இவ்வமயம் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன, செப்பம் செய்யப்பட!" என்று கூறித் தன் மன்னனின் படைக்கலங்கள் வல்லமை மிக்கன எனத் தெளிவுறுத்தினார்.

பழந் தமிழகத்தில் மலை மீது இட்ட விளக்குப் போன்று ஒளி காட்டிச் சிறந்திருந்தவர்கள், புலவர் பெருமக்கள் என்று அறிகிறோம். சான்றோராக இருந்த அவர்களின் சிறப்பு தமிழகத்தின் சிறப்பாகும். ★

அவமானம்! அவமானம்!!

மாகாணப் புனரமைப்பு மசோதா சட்டமாகும்போது, "சென்னை இராஜ்யத்துக்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும்" என்று திருத்தம் பிரரேபிக்கப்பட்டதாம், டில்லி பார்லிமெண்டில்.

டில்லி, திருத்தத்தை வீசி எறிந்துவிட்டது.

ஏன்? எதற்கு?—என்று இங்கிருந்து சென்ற எவரும் கேட்கவில்லை! மௌனியாகவே இருந்திருக்கின்றனர்!

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு என்று பெயரிடும் திருத்தத்தைப் பிரரேபித்ததுகூட இவர்கள் அல்லவாம்! பூபேஷ் குப்தா எனும் வங்காள உறுப்பினராம்!

பேரிடி வருகிறது

இந்நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக இருக்கும் மிகப் பெரிய குடிசைத் தொழில் கைத்தறித் தொழிலாகும். இதில் ஈடுபட்டிருக்கும் இலட்சக்கணக்கான ஏழை நெசவாளர்களுக்கு ஏதாவது பரிகாரம் தேடித்தருவதற்காக சில ரகத் துணிகள் கைத்தறிகள் மட்டுமே தயாரிக்கவேண்டும் என்று கருதி "கரைபோட்ட வேட்டிகளையும் கலர் சேலைகளையும்" உற்பத்தி செய்யும் உரிமை பூராவும் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டுமென்று சென்னை சட்டசபையில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ஆச்சாரியார் முதலமைச்சராயிருந்தபோது.

எனினும், டில்லி சர்க்கார், சென்னை சர்க்காரின் ஏகோபித்த முடிவை நிராகரித்துவிட்டது! இந்நாட்டின் பண, மில் முதலாளிகளின் பிரதிநிதியாக மத்திய சர்க்காரில் வர்த்தகத் தொழில்துறை இலாகாவின் மந்திரியாயிருக்கும் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கைத்தறிகளுக்கு ரக ஒதுக்கலை கண்டிப்பாக ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். திரு. இராசகோபாலாச்சாரியாரின் திட்டத்துக்கு இந்நாடு முழுமையும் பேராதரவு இருந்தது. அத்திட்டத்தை ஒப்புக்கொண்டு அமுல் நடத்துமாறு பலதிறப்பட்ட அரசியல் கட்சிகளும், இந்நாட்டிலுள்ள எல்லா நெசவாளர் ஸ்தாபனங்களும் மத்திய சர்க்காரை வற்புறுத்தின. இந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்கும் எதிர்காலத்தில் நெசவாளர்களுக்குள்ளேயே பிளவு ஏற்படுத்தும எண்ணத்துடனும், திரு. டி.டி,கிருஷ்ணமாச்சாரியார் "செஸ் நிதி" திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார், "செஸ்நிதி" நெசவாளர்கள் தற்கொலை செய்துகொள்வதற்கு நல்லதொரு தூக்குக் கயிறு என்றார் திரு. இராசகோபாலாச்சாரியார். என்போன்ற சிலர் ஆரம்பத்திலிருந்தே செஸ் நிதி முறையை ஆட்சேபித்து வந்திருக்கிறோம், மத்திய சர்க்காரால் டி, டி. கே.வுக்கு இருக்கும் அபரிமிதமான செல்வாக்கைக்கொண்டு செஸ்நிதி திட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்துவிட்டார், பின்னால் வரப்போகும் பெரிய கேட்டினை எண்ணிப் பார்க்காது. அப்போதைக்கு கிடைக்கிற சிறு உதவியைப் பெரிதென எண்ணி செஸ் நிதி விநியோகத்தில் கைத்தறி நெசவாளர் ஸ்தாபனங்கள் பல் பங்கெடுத்துக்கொண்டன. செஸ் நிதி வினியோகத்தினால் நெசவுத் தொழிலாளர்கள் எவ்வளவு நன்மை பெற்றனர் என்பது விவாதத்திற்குரிய செய்தி — மொத்த நெசவாளர்களில் ஐந்தில் ஒரு பகுதியைக்கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்ந்த சில நெசவாளர்களுக்கு செஸ் நிதியினால் சில நன்மைகள் ஏற்பட்டன. கூட்டுறவுக்கு வெளியிலுள்ள பெரும்பாலான நெசவாளர்களுக்கு செஸ் நிதியினால் நன்மை ஏதும் ஏற்படாததுமட்டுமல்ல, நிச்சயமான பாதகம் ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும் வெளியிலிருக்கும் நெசவாளர்களுக்கும் பேதம் ஏற்படுத்திவைக்க சர்க்காருக்கு செஸ் நிதி நல்ல உதவியளித்திருக்கிறது.

> நெசவாளர்களுக்கு இன்றைய தினம்ஏற்பட்டிருக்கும்புதிய ஆபத்து சாதாரணமானதல்ல! இதற்கு சர்க்கார் சார்பில் தரப்படும் பதில்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதை புள்ளி விபரங்களோடு ஆராய்கிறார், சேலம் ஏ. சித்தையன்.

*

இதன் மத்தியில் திரு. T. T. கிருஷ்ணமாச்சாரியாரின் மந்திரிசபை 1952 நவம்பரில் அப்போது வெறும் பார்லிமெண்டு மெம்பராகவும் இப்போது மத்திய சர்க்கார் மந்திரியாகவுமிருக்கும் திரு. நித்தியானந்த கனுங்கோவை தலைவராகக் கொண்டு நூல் துணி விசாரணைக் கமிட்டி ஒன்றை அமைத்தது. அந்தக் கமிட்டி இந்நாடெங்கும் சுற்றி பருத்தி நூல் நெசவுத் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் ஸ்தாபனங்களையும் அமைப்புகளையும், தனிபட்ட பேரையும், விசாரித்ததாகப் பெயர். (அவர்கள் எப்படி யார் யாரை விசாரித்தனர். நெசவுத் தொழிலாளர்களின் குறைபாடுகளை எவ்வாறு தெரிந்துகொள்ள முயன்றனர் என்பது மிக மிக விவாதத்திற்குரியது. கமிட்டியினர் சேலம் வந்திருந்தபோது எனக்கும் திரு. கனுங்கோ அவர்கட்கும் இதைப்பற்றி சர்ச்சை நடந்தது, தனிப்பட்டவர்களும் ஸ்தாபனங்களுமாக இந்நாடு முழுமைக்கும் 58-பேரை விசாரித்திருப்பதாக கமிட்டியினரே தங்கள் அறிக்கையின் பதினொன்றாவது பாராவில் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்) இக்கமிட்டியினர் சமர்ப்பித்த அறிக்கையை 1954 செப்டம்பரில் இந்திய சர்க்கார் வெளியிட்டது. இவ்வறிக்கையை அகில இந்திய கைத்தறி போர்டு, அகில இந்திய காதி போர்டு உள்பட நாட்டின் நான்கெல்லைக்குள்பட்ட எல்லா ஸ்தாபனங்களும், எல்லா அரசியல் கட்சிகளும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் கிளைகளும்கூட மிக வன்மையாகக் கண்டித்து சர்க்கார் கனுங்கோ அறிக்கையை ஒப்புக்கொள்ளக் கூடாதென ஒருமுகமாகத் தெரிவித்திருக்கின்ற

னர். இந்தியப் பார்லிமெண்டில் அங்கத்தினர்கள் கனுங்கோ கமிட்டி அறிக்கையை கண்டித்துப் பேசியபோது அவ்வறிக்கையை சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கிறதே தவிர இன்னம் அமுலாக்கவில்லை என்று இதே டி. டி. கே. பதில் கூறியுள்ளார். ஆயினும் கனுங்கோ அறிக்கையின் பல அம்சங்களை நெசவுத் தொழிலாளர்களுக்கு மிகக் கொடுமையான பாதகம் விளைவிக்கும் பல திட்டங்களை துண்டு துண்டாக அமுலுக்கு கொண்டு வருவதில் கனுங்கோ கமிட்டியின் சிருஷ்டி கர்த்தாவான திரு. டி. டி. கே. சென்ற இரண்டு வருடங்களாகவே பலமான பிரயத்தினம் செய்து வருகிறார்.

25 ஆண்டுகளுக்குள் படிப்படியாக கைத்தறித் தொழிலையே அடியோடு அழித்து விடுவது என்னும் கனுங்கோ கமிட்டியின சாரத்தை இந்திய சர்க்காரின் 'புதிய ஜவுளிக் கொள்கை' என்னும் பேரால் அமுலாக்கமுன்வந்துவிட்டார் கிருஷ்ண மாச்சாரியார். எனவே இது வரை கூறி வந்த இன்றைய நெசவாளர்களின் நிலையை வைத்துக் கொண்டு சர்க்காரின் புதிய துணிக் கொள்கையை ஆராய வேண்டியது மிக இன்றியமையாதது. புதிய துணிக் கொள்கையின் முக்கிய அம்சங்கள். **கைத்தறிப் பகுதியில் விசைத் தறிகளைப் புகுத்துவது**

மில் பகுதிகளில் தானாக இயங்கும் தறிகளைப் புகுத்துவது.

கைத்தறிகளுக்கு பதிவு என்னும் **பேரால் லைசென்ஸ் பெறுவது.** (இவையெல்லாம் கனுங்கோ அறிக்கையில் கூறப் பட்டவையே)

*

1. நாட்டு மக்களுடைய தேவைக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் தேவைப்படுகிற துணி இரண்டாம் ஐந்தாண்டு திட்ட கால இறுதியில் அதாவது 1959-60-ல் இப்போதிருப்பதை விட அதிகம் தேவைப்படுகிறது. அந்த அதிக தேவையை ஈடுகட்ட மில்லுகளில் தானாக 'இயங்கும்தறிகள்' 14,600ம் கைத்தறிப் பகுதியில் இவ்வாண்டுக்கும் அடுத்த ஆண்டுக்குமாக 35,000 விசைத் தறிகளைப் புகுத்துவது.

2-கைத்தறிகளைக் கட்டுப்படுத்த லைசென்ஸ் வழங்குவது.

1951-ம் ஆண்டில் இந்திய யூனியனின் மக்கள் தொகை 36 கோடி. ஒரு வருஷத்துக்கு பத்து லக்ஷம் பெருகும் என்று வைத்துக்கொண்டால் 1959-60-ல் இந்தியாவின் மக்கள் தொகை 40-கோடி இருக்கலாம். இதுவரை நம் நாட்டில் தலைக்கு சராசரி எவ்வளவு கஜம் துணி உபயோகித்திருக்கின்றனர் என்று பார்க்கிறபோது முதல் ஐந்தாண்டு திட்ட மத்தியில் அதாவது 1953-54-ல் 14½ கெஜமாக இருந்தது என்பதை கனுங்கோ கமிட்டி தெரிவிக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இன்னும் 25-சதவிகிதம் அதிகமாக வாங்குவதற்கு மக்களின் வாங்கும்சக்தி அதிகப்படும் என்று சர்க்கார் அபிப்பிராயப்படுகிறது. இப்போதிருக்கும் நிலையில் அம்மாதிரி உயரும் என்பதற்கு அறிகுறிகள் ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும் வாதத்திற்கு அதை அப்படியே ஒப்புக் கொள்வோம். அதன்படி 1959-60ல் சராசரி ஒருமனிதனுடைய தேவை 18-கெஜமாகிறது. இன்னும் சற்று தாராளமாகவே நான் கணக்கு கொடுக்க விரும்புகிறேன். இரண்டாம் திட்ட இறுதிக் காலத்தில் எதிர்பாராவிதமாக பொருளாதார நிலை உயர்ந்து மக்களின் வாங்கும் சக்தி பெருகி தலைக்கு 20-கெஜம் வாங்குகிறார்களென்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் 800 கோடி கஜம் துணி தேவைப்படும். இப்போதைய உற்பத்தி விபரம்:-

இந்திய மில்களில்
500-கோடி கஜம்

விசைத் தறிகளில்
20-கோடி கஜம்

கைத் தறிகளில்
150-கோடி கஜம்

ஆக 670-கோடி கஜம் உற்பத்தியாகிறது. தேவை 800-கோடி. மிகுதியை எப்படி சரிக்கட்டுவது?

தலைக்கு இருபது கஜம் தேவையில் பட்டுத் துணி நார்பட்டுத் துணி, ஸ்டேபிள் துணி கம்பளித் துணி ஆகியவை உள்ளிட்டதேயாகும் (இவைகளில் இறக்குமதி உள்நாட்டு உற்பத்தியும் சேர்ந்தது) இந்த ரகத் துணிகள் சராசரி தலைக்கு 5-கஜம் வீதம் கணக்கிட்டால் 40 கோடி ஆகிறது. இதை நீக்கினால் பருத்தி துணி மட்டும் 760-கோடி கஜம் உள்நாட்டுக்கு மட்டும் தேவைப்படுகிறது. இதன்னியில் வெளிநாட்டு ஏற்றுமதி இருக்கிறது. இப்போது சுமார் 85-கோடி கஜம் துணிகளை நாம் ஏற்றுமதி செய்துக்கொண்டிருக்கிறோம். 1952-ல் இங்கிலாந்திலுள்ள பக்ஸ்டனில் நடந்த அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், இந்தியா மேற்கு ஐரோப்பா நாடுகளின் நூல் துணிப் பிரதிநிதிகள் மகாநாட்டில் இந்திய தூது கோஷ்டி தலைவராக சென்ற கஸ்தூரிபாய் லால்பாய் இந்தியா ஆண்டுக்கு 100-கோடி கஜம் ஏற்றுமதி செய்ய விரும்புகிறது எனக் கூறியதை மற்ற நாட்டு பிரதிநிதிகளும் ஒப்புக் கொண்டனர். அதன்படி ஏற்றுமதிக்கு தேவைப்படுவது 100 கோடி கஜம்.

இதில் வர்த்தக மந்திரி டி. டி. கே-வுக்கும் திட்டமந்திரி நந்தாவுக்கும் அபிப்பிராயப் பேதம். டி. டி. கே. 125-கோடி ஏற்றுமதி செய்யவேண்டுமென்கிறார். நந்தா 100-கோடி நிர்ணயப்படுத்த வேண்டுகிறார். சர்வ தேச சந்தையில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் போட்டிகளுக்கிடையில் இந்த 100 கோடி கஜம் ஏற்றுமதியே சாத்தியமாகக் கூடியதா என்பது ஐயப்பாட்டுக்குரியதேயென்றாலும் வாதத்திற்கு டி. டி. கே. சொல்லுகிறபடி 125-கோடி கஜம் ஏற்றுமதிக்கு தேவைப்படுகிறதென்றே வைத்துக்கொள்ளலாம்.

உள்நாட்டுத் தேவை
760-கோடி

வெளிநாட்டு ஏற்றுமதி
125-கோடி

ஆக 885-கோடி துணி 1960-ல் நமக்கு தேவைப்படுகிறது.

இந்த 885 கோடி கெஜம் துணி உற்பத்திக்கு தேவைப்படுகிறநூல் இப்போதிருக்கும் மில்களிலேயே உற்பத்தியாகிவிடுமா என்பது அடுத்த கேள்வியாகும். இந்த விஷயத்திலேகூட வர்த்தக மந்திரிக்கும் திட்ட மந்திரிக்கும் அபிப்பிராய பேதமிருக்கிறது என்பதை நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும்.

இப்போதுள்ள மில்களைக்கொண்டே அதிகப்படியான துணி உற்பத்திக்குப் போதுமான நூல் கிடைக்கச் செய்யமுடியும் என்று திட்ட மந்திரி கூறுகிறார்.

அக்கூற்றில் ஐயங்கொண்ட வர்த்தக மந்திரி டி. டி. கே. அதிகப்படியான கதிர்களை உடனடியாக விஸ்தரிக்கவேண்டுமென்கிறார்.

ஆனால் இவ்விரு மந்திரிகளில் யாரும் சர்க்காவில் உற்பத்தியாகும் நூலைக் கணக்குக்கே கொண்டுவரவில்லை.

நூற்பு ஆலைகளில் ஒரு ஷிப்டுக்கு ஒரு கதிரில் 4-அவுன்ஸ் உற்பத்தியாகும் என்பது வர்த்தக மந்திரியின் வாதம்! திட்டமந்திரி ஐந்து அவுன்ஸ் என்கிறார்! கனுங்கோ கமிட்டி ஐந்து அரை அவுன்ஸ் என்கிறது!

மூன்று ஷிப்டுகள் வேலை செய்வதிலேயும் சிக்கல் இருக்கிறது என்கிறார் வர்த்தக மந்திரி. நம்முடைய வாதத்திற்கு நூற்பு மில்கள் மூன்றாவது ஷிப்டு ஓட்டுவதைக்கூட புறக்கணித்துவிடுவோம். மில்களில் இப்போதுள்ள மொத்த கதிர்களின் எண்ணிக்கை 119 லக்ஷம் என்பதில் எந்தவித தகராறும் இல்லை. இவைகளில் வர்த்தக மந்திரி தெரிவித்திருக்கிறபடி சோம்பிக்கிடக்கிற 5-சதவிகிதத்தை தள்ளிவிட்டால் வேலைசெய்கிற கதிர்களின் எண்ணிக்கை 113 லட்சம். தொழிலாளர் தொல்லை, மின்சாரவெட்டு ஆகிய எதிர்பாராச் சம்பவங்களுக்காக நாம் இன்னொரு 13-லட்சத்தையும் தள்ளிவிடலாம். மீதமிருக்கிற 100-லட்சம் கதிர்களில் இரண்டு ஷிப்டுகளில் நாள் 1-க்கு 750-இலட்சம் ராத்தல் அல்லது 300 நாட்களுக்கு 225-கோடி ராத்தல் நூல் உற்பத்தி செய்வது சாத்தியமாகிறது. இந்நூலை துணியாக மாற்றினால் ராத்தல் 1-க்கு நாலுஅரை கஜம் வீதம் 10,1250-இலட்சம் கஜம் துணியாகிறது. (இதுவல்லாமல் நாட்டில் கதர் துணி உற்பத்தியுமிருக்கிறது என்பது நினைவிருக்கட்டும்!) இதன்படி நம்முடைய தேவையாகிய 885-கோடி கஜங்களுக்கு அதிகமாகவே இப்போதுள்ள கதிர்களில் உற்பத்திசெய்யும் நூலைக்கொண்டே தயாரிக்க முடியும் என்பது நிச்சயமாகிறது. (இவைகள் தவிர 1951–55 வருஷங்களில் யுத்த பிற்கால விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட கதிர்கள் இதில் சேர்க்கப்படவில்லை) மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்களிலிருந்து கதிர்கள் மேலும் விஸ்தரிக்கத் தேவையில்லை என்பது நன்கு புலப்படுகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

அருணோதயம் தரும் அறிவுக் கருவூலங்கள்!

கவிஞர் கண்ணதாசன் எழுதிய

ராஜ தண்டனை	2—0—0
ஆயிரம் தீவு அங்கயற் கண்ணி	4—8—0
ஈழத்து ராணி	1—0—0
இலக்கியத்தில் காதல்	1—4—0
பெரும் பயணம்	1—0—0
தமிழர் திருமணமும் தாலியும்	0—6—0

எஸ். எஸ். தென்னரசு எழுதிய

சந்தன மழை (நாடகம்)	1—0—0
தேவாலயம் ,,	1—4—0
கண்மணி (நாவல்)	1—0—0
இல்லற இன்பம் 'அருணன்'	1—0—0

முன்பணம் அனுப்பியோ வி-பி. மூலமோ பெற்றுக்கொள்ளவும். வியாபாரிகள் கழிவு 25%

அருணோதயம், சென்னை 14.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் எம்மிடம் சிரித்துப் பேசுகிறார், ஆகவே, இந்தத் தடவை சித்திரவதையைச் சகித்துக் கொள்ளும்படி செந்தமிழ் நாட்டவருக்குக் கூறுவோம் வாரீர் என்று நாட்டு மக்களை அழைத்திட என்னால் எப்படித் தம்பி முடியும்! அவர்கள் அழைக்கிறார்கள்!

நான், முன்பு பெரியார் காங்கிரஸ் குறித்துச் சொன்னதை மறவாமலிருக்கிறேன்—மாற மறுக்கிறேன்.

"காங்கிரஸ்காரர்கள் ஆளத் தகுதியற்றவர்கள் அவர்களுக்கு நிர்வாகத் திறமையில்லை.

*காங்கிரசின் பெயரைச் சொல்லிக்கொண்டு, காந்தியின்பெயரைச் சொல்லிக்கொண்டு, கதர் வேஷம் போட்டுக்கொண்டு ஏமாற்றுகிறவர்கள், ஜனநாயகம் என்று சொல்லிக்கொண்டு—மக்கள் அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு பதவி வேட்டை ஆடுகிறவர்கள் மக்களுடைய கருத்தை அலட்சியம் பண்ணிவிட்டுத் தங்களுடைய விருப்பப்படி அதிகாரம் செலுத்த ஆசைப்படும் **ஏதேச்சாதிகார வெறியர்கள்**."*

*அந்த வெறியர்களிலே **வேண்டியவர்கள்**—வேண்டாதவர்கள் என்று பாகுபாடு என்ன **தேவைப்** படுகிறது. பெரியாரின் 'பாஷை'யில் கேட்கிறேன், எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி **நல்ல** கொள்ளி?*

*காமராஜர் நல்லவர், **என்கிறார்**கள்—எனக்குப் பெரியார் பேசும் அந்தப் பழமொழி நினைவிற்கு வருகிறது.*

நேருவுக்கு வலது கரம், பார்ப்பனப் பாதுகாவலர், முதலாளிக்கு இரும்புத்தூண், அடிதடியாட்சிக் கர்த்தா, கொலைபாதக ஆட்சிக்கு உடந்தையானவர்.

இவை, காமராஜருக்கு விடுதலை சூட்டிய பட்டங்கள்.

*முன்பு தேர்தலில் **திருவில்லி**புத்தூர் தொகுதியில் **நின்று காம**ராஜர் வெற்றி பெற்றார் — அப்போது அவர் தோற்க **வேண்டும்** என்பதற்காகப் பட்டபாடு **வீணா**னது கண்டு, மனம் வெதும்பி "எப்படிப்பட்ட 'ஆசாமி' வெற்றிபெற்று விட்டார், ஐயோ! தமிழகமே! உன் கதி இதுவாகவா போகவேண்டும்" என்று கொதித்தெழுந்து கேட்டு, விடுதலை தீட்டிற்று. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரை—அடிதடியாட்சிக்குக் காரணமாயிருந்த தலைவரை—எதிர்க்கட்சிக்காரர்களைச் சுட்டுக்கொன்ற கொலைபாதக ஆட்சிக்குக் காரணமாயிருந்த கட்சித் தலைவரை தோற்கடித்து உலகப்புகழ்பெற வேண்டுமென்று கருதியிருந்த தமிழர்கள் ஏமாந்துவிட்டனர்.*

இராவணீயம் தோற்றுவிட்டது. விபீஷணத்துவம் வெற்றிபெற்றுவிட்டது."

*தம்பி! இப்போது இந்த விபீஷணத்துவ வெற்றியிலே **தான்** தமிழரின் நல்வாழ்வே **இருக்கிறது** என்று எடுத்துக் கூறுகிறார்கள்—நியாயந்தானா?*

*விபீஷணன், **இராவணனை** விடவுமில்லை; விபீஷணன் இராவணன் ஆகிறோர்பற்றி **கொண்***

டுள்ள கருத்தும் மாற்றிக்கொள்ளப்படவில்லை; ஆனால் திருவில்லிபுத்தூரில் வெற்றிபெற்ற காமராஜர், விபீஷணர்; இன்று அவர் தமிழர் தலைவர்!! ஏன்? ஏன்?

திருவில்லிபுத்தூரில் வெற்றி பெறுவதற்காகக் காமராஜர் ஊரூர் சுற்றி ஓட்டுக் கேட்டுக்கொண்டிருந்தபோது, அவர் எப்படிப்பட்டவர் என்பதுபற்றி விடுதலையில் 'விமர்சனம்' வெளிவந்தது, அதையும் கொஞ்சம் பார்—அவர்களிலே பொறுமைசாலிகள் இடைத்தால் பார்க்கச் சொல்லு;

நாடாரின் வாய்ப்புக் குறித்து கேட்டேன், இதற்கு ஒரு குடிமகன் கூறியதாவது:—

"காங்கிரஸ் தலைவர் காமராஜ் நாடாருக்கு இங்கு செல்வாக்கில்லை. அவர் எங்கு சென்றாலும் யாரோ என்று மக்கள் அலட்சியமாகக் கருதுகின்றனர்.

அவருக்கு அரசியல்பற்றி மூலாதார அறிவே கிடையாது.

"நாடாரால் அரசியல் சூழ்ச்சிகள்தான் நாம் தெரிந்துகொள்ள முடிந்தது. போதும் அச்சூழ்ச்சிகள்"

"முதலமைச்சராயிருந்த கண்ணியமான அரசியல்வாதியான ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரைமேற்படி பதவியிலிருந்து நீக்கியதற்கு நாடார்தான் பொறுப்பாளி. அவ்வாறு இருக்க, நாடாருக்கு ஏன் நாங்கள் எங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்"

"நாடாரைப்போன்ற சுய சாதிப் பித்தரைப் பார்க்கமுடியாது. சுய சாதியிலும் தமக்கு வேண்டிய நண்பர்களுக்கே சலுகை காட்டுவார். எனவே நாடார்களிலே பெரும்பாலோர் அவருக்கு எதிராகவே இருப்பர்"

இருக்கலாம்! திருவில்லிபுத்தூர் தேர்தலின்போது காமராஜரின் குணாதிசயம் அவ்விதம் இருந்திருக்கலாம்—பிறகு அவர், படிப்படியாக, மெல்ல மெல்ல, நல்லவராகிவிட்டிருக்கக்கூடாதா, என்று கேட்கத் தோன்றும் தம்பி, அந்த ஆராய்ச்சியும் சிறிதளவு செய்தே பார்த்துவிடுவோமே, அதிலென்ன கஷ்டம்.

"காமராசர் தோற்றார் என்ற செய்தியினால் இந்த மாகாணம் மட்டுமல்ல, இந்த நாடே எவ்வளவு கிடுகிடுத்துப் போயிருக்கும். நேருவுக்கு வலது கையாகவும், பார்ப்பனர்களுக்கு நீங்காத் துணையாகவும், முதலாளிகளுக்கு இரும்புத் தூணாகவும் இருக்கின்ற ஒருவரைத் தோற்கடிக்கக்கூடிய தலைசிறந்த வாய்ப்பைத் தமிழ்மக்கள் இழந்துவிட்டார்களே! தோழர் தங்கமணிக்கு பயந்துகொண்டு விருதுநகரை விட்டு ஓடி, சென்னைராஜ்யசட்டசபையையும்விட்டு ஓடி பார்லிமெண்ட் அபேட்சகராக நின்ற ஒருகாங்கிரஸ் தலைவரை தோற்கடிக்கக்கூடிய தங்கமான வாய்ப்பைப் பாழாக்கிவிட்டார்களே படுமோசக்காரர்கள்"

என்று விடுதலையில் எழுதப்பட்டது; இதை எல்லாம் கண்டு காமராஜர் திருந்திவிட்டிருக்கக்கூடாதா என்று கேட்போர் எழக்கூடும் அல்லவா? அதையும் கவனிப்போம், தவறென்ன!

காவடி தூக்கினர்

கன்னத்தில் போட்டுக்கொண்டார்

காலில் வீழ்ந்தார்

தோள்மீது சுமந்தார்

கோவை சுப்பிரமணியத்தை அடுத்துக் கெடுத்தார்!

இவ்வளவு, திடுக்கிடக்கூடிய கேடுகளை, இழிவு என்றும் பாராமல் செய்த ஆசாமி யார்? இப்படி ஒரு தமிழ்ப் பண்பு இழந்தவரை நாடு தாங்கிக்கொண்டிருக்கிறதா? தமிழ் மண்ணிலேயா தாசர் புத்தி தலைக்கேறிய 'ஜென்மம்' இருக்கிறது!—என்றெல்லாம் கேட்கத் தோன்றும். ஆசாமி யார், என்பதை அறிந்துகொள்வதற்கு முன்பு, அரசியல் சம்பவம் என்ன என்பதுபற்றி அறிந்துகொள்வோம்.

பொதுத் தேர்தல் முடிந்து, காங்கிரஸ் இளைத்து, ஈளைகட்டி எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி என்ன செய்யுமோ என்று கிலிகொண்டிருந்தது.

அப்போது தமிழ்நாடு காங்கிரசுக்கு, காமராஜர்தான் கக்கன்.

காங்கிரஸ் குலைந்துவிடாதிருக்கவும், மந்திரிசபை அமைக்கவும், ஆச்சாரியாருடைய தயவு தேவைப்பட்டது.

ஆச்சாரியாருக்கும் தனக்கும் நீண்டகாலமாக இருந்துவரும் விரோதத்தை, இந்தச் சமயம் கவனித்தால், காரியம் கெட்டுவிடும் என்று கருதிய காமராஜர், காங்கிரஸ் கட்சி சார்பில் மந்திரிசபை அமைத்து நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி, ஆச்சாரியாரிடம் சென்று, "பயபக்தி விசுவாசத்துடன்" பணிந்து கேட்டார்.

அந்த "அடிமைப் புத்தியை"க் கண்டித்து, காரசாரமாக விடுதலை எழுதிற்று- அதுபோது கிடைத்த மணிமொழிகள்தான் முன்னாலே உள்ளன.

"திருப்பரங்குன்றத்தில் தங்களைக் குப்புறத் தள்ளியதற்காகக் கன்னத்தில் போட்டுக்கொள்கிறோம். திராவிடர்களாகிய எங்களில் யாருக்கும் தலைமைப்பதவிக்கான தகுதி கிடையாது. நாங்களெல்லோரும் அடி முட்டாள்கள். நெல்லிக்காய் மூட்டைகள். உதவாக்கரையான சுரைக்காய் குடுக்கைகள். தங்கள் திருப்பாதங்களைக் கண்ணில் ஒத்திக்கொள்கிறோம். தயவு கூர்ந்து கருணை புரியுங்கள். மீண்டும் பதவியேற்று எங்களுக்கு நல்லபுத்தி கற்பியுங்கள்"

என்று கூறுவதுபோல அவர் வீட்டுக்கு நூறுதடவை காவடி தூக்கி மண்டியிட்டு வணங்கி, தோள்மீது சுமந்துவந்து தலைமைப் பீடத்தில் அமர்த்திவிட்டனர்.

தோழர் காமராசர் கோவை சுப்ரமணியத்திடம் கூடவே இருப்பதுபோல நடித்து, இறுதியில் அவரைக் கவிழ்த்துவிட்டு ஆச்சாரியாரிடம் அடைக்கலம் புகப்போகிறார் என்று ஒரு வாரத்துக்கு முன்பே பல முக்கிய நண்பர்கள் பேசிக்கொண்டனர். அது தவறு என்று கருதினோம். ஆனால் இன்று உண்மையாகிவிட்டது!!

எனவே, திருவில்லிபுத்தூரில் எந்தக் காமராஜர் தெரிந்தாரோ

அவரேதான், பிறகும் தெரிகிருர்—விடுதலையின் கண்ணேட்டத்தின் படி.

காங்கிரஸ் கட்சியின் கண்ணியத்தையும் செல்வாக்கையும் காப்பாற்றுவதற்காக, சொந்தத்தில் இருந்துவந்த பகையையும் மறந்ததுபெருந்தன்மையல்லவா! சொந்தத்தில் 'மானுபிமானம்' பார்த்துக்கொண்டு, கட்சி எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று அவர் இருந்துவிடவில்லை, இதிலிருந்தே அவர் எவ்வளவு நேர்மையுணர்ச்சி கொண்டவர், கட்சிப்பற்றுக் கொண்டவர் என்பது தெரியவில்லையா?

காங்கிரசுக்குள்ளேயோ பிளவு இருக்கிறது —காமராஜ் காங்கிரஸ்—ராஜாஜி காங்கிரஸ் என்று கோஷ்டிச் சண்டை இருக்கிறது, கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டும் இருக்கும் இந்தச் சமயம் தான் அந்தக் கட்சியை ஒழித்துக்கட்ட ஏற்றதுஎன்று காங்கிரஸ் விரோதிகள் எண்ணுவார்கள், இதற்கு நாம் இடமளிக்கக்கூடாது, நமக்கும் இராஜகோபாலஆச்சாரியாருக்கும் சொந்தத்தில் ஆயிரத்தெட்டு விரோதம் இருக்கலாம், அதற்காகக் காங்கிரசுக்குக் கேடுவர சம்மதிக்கக்கூடாது, இப்போது நாம் எப்படியாவது ஆச்சாரியார் துணையைப் பெறவேண்டும் என்று எண்ணிக் காரியமாற்றியது மிகத் திறமையான இராஜதந்திரமல்லவா?

இவ்விதமெல்லாம் கூறவில்லை,

காவடி தூக்கினர்
காலடி வீழ்ந்தார்
கன்னத்தில் போட்டுக்கொண்டார்

என்று சொன்னதுடன், கோவை சுப்ரமணியத்தை அடுத்துக் கெடுத்தார் என்றுதான் கூறப்பட்டது.

காங்கிரஸ் அமைச்சு நடைபெறுகிறது — பெரியார் போர்க்கொடி உயர்த்தினர், வடநாட்டுத் துணிக் கடை, உண்டிச் சாலைகளின் முன்பு மறியல் நடத்தினர். அப்போது, காமராஜர் என்ன செய்தார்?

ஆட்சியில் உள்ளவர்கள் உண்டு, பெரியார் உண்டு, நமக்கென்ன என்று இருந்தாரா? இல்லை!

இதென்ன மறியல்! நாங்கள் செய்த மறியல், மகத்தானது தூய்மையானது — அது சத்யாக்கிரம்—இது துராக்கிரகம்—என்று கண்டித்தார்.

அடக்குவோம், ஒடுக்குவோம் என்று ஆர்ப்பரித்தார்.

ஆட்சியாளருக்கு இவர் 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு பேசினர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், அது அவருடைய கடமை அல்லவா, என்று கேட்பர்; ஆம்! ஆம்! கடமை! அதனைக் குறைகூற அல்ல இதுபோது கூறுவது, அந்தச் சமயத்தில் காமராஜர், நல்லவர் — நம்மவர் என்று கூறத்தக்க நிலையில் இல்லை என்பதை நினைவூட்டத்தான்.

காமராஜர் அத்துடன் விடவில்லை; மறியலுக்கு எதிர் மறியல் செய்யப்போவதாகக் கூறினர். எடுத்தனர் எழுதுகோல்—தொடுத்தனர் பாணம்—காமராசர் என்ருேர் தலைப்பில் தலையங்கம் வெளி வந்தது விடுதலையில் — அதிலே, காமராசரின் படப்பிடிப்பு முதல்தரமாக அமைந்திருக்கிறது—காண்போம் தம்பி, காண்போம்.

"காமராஜர் இன்றைய இந்த தமிழ்நாட்டில் தன்னை ஒரு சர்வாதிகாரி ஸ்டாலின் என்று எண்ணிக் கொண்டிருக்கிருர். சர்க்கார் தன் காலடியில் இருப்பதாகவும், மந்திரிகள் தன்னுடைய அடிமைகள் வேலைக்காரர்கள் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிருர்."

எடுத்த எடுப்பிலேயே, விடுத்த கணை 'விர்'ரென்று பாய்கிறது பார்த்தாயா தம்பி,

அகம்பாவம்
ஆணவம்
அதிகார வெறி

எனும் கொடிய குணங்கள் குடிகொண்டவராக, சர்வாதிகாரியாக இருக்கிருர், என்று, சவுக்கடி கொடுத்த விடுதலை, மேலும் எழுதுகிறது

"காமராஜர் யார்? அவரின் இயற்கை நிலை என்ன? எப்படி இருந்தவர்? என்ன காரணத்தால் இவர் பொது வாழ்வில் மதிக்க வேண்டியவரானர்? இன்றைய வாழ்வு இவருக்கு எப்படி வந்தது? இவருடைய பொருளாதாரம், கல்வி, பொது அறிவு, அரசியல் திறமை, தகுதி, திறமை நேர்மை, அனுபவம், ஒழுக்கம் எவ்வளவு? என்பவைகளான விஷயங்களை இவரே சிந்தித்துப் பார்ப்பாரானல் இவர் இப்போது பேசும் பேச்சுகளுக்கு தான் தகுதியுடையவரா? இந்தப் பேச்சுகள் பேசுவது தன் போரால் இருந்து வரும் பதவிக்கு ஏற்றதா என்பது விளங்குவதோடு மிகுதியும் வெட்கப்படுவார் என்றே கருதுகிருேம்"

காமராஜர்மீது இந்தக் கடும்தாக்குதலை நடத்தினல் மட்டும் போதாது, இதில் ஒளிவு மறைவு என்ன, மக்களிடம் வெளிப்படையாகக் கூறிவிடவேண்டியதுதான், என்று தீர்மானித்து, காமராஜரின் முகமூடியைப் பிய்த்தெறிந்து, இந்த அவலட்சணத்தை நீங்களே பாருங்கள் என்று மக்களிடம் காட்டுவதுபோல, விடுதலை, மேலால் எழுதுகிறது;

"காங்கிரசானது முதல் தர மக்களிடமிருந்து பிடுங்கி மூன்ருந்தர மக்களிடம் ஒப்புவிக்கப்பட்டாலொழிய தங்களால் இந்த நாட்டில் வாழமுடியாது என்கின்ற நிலை, பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டபோது, அந்தமாதிரி நிலை பார்ப்பனருக்கு ஏற்படும்படியாக சுயமரியாதை இயக்கம் செய்துவிட்டதன் பயனய் பார்ப்பனர்கள் தேடிப்பிடித்த ஆள்களில் ஒருவராக காமராஜர் பார்ப்பனர்களுக்குக் கிடைத்தவரே தவிர, அதற்கேற்ற காமராஜரின் தகுதி என்ன என்று சிந்திக்கப் பொது மக்களை வேண்டுகிருேம்"

தம்பி! நீயும் நானும் காங்கிரஸ் வரலாற்றிலே பெரும் பகுதியை, படித்துத் தெரிந்து கொண்டவர்கள்—பெரியார் அப்படி அல்ல; அவர் அந்தச் சம்பவங்களிலேயே

தொடர்பு கொண்டிருந்தவர். காங்கிரசின் தலைவர்களின் கொடிவழிப் பட்டி அறிந்தவர் — யாரார் என்னென்ன யோக்யதை உள்ளவர் என்பதைத் தெரிந்தவர் — எவரெவர் எப்படி எப்படிக் காங்கிரசுக்குள் வந்து சேர்ந்தனர் என்ற 'கதைகள்' அவருக்குத் தெரியும்.

அவர் கூறுகிறார், இந்தக் காமராஜர், பார்ப்பனர்கள் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தவர்களிலே ஒருவர் என்று.

மூன்றுந்தரம்!! என்பதைக்கூறி விட்டு, சந்தேகமிருப்போர்,

கல்வி
பொது அறிவு
ஒழுக்கம்
அனுபவம்
நேர்மை
தகுதி
திறமை

என்ற இவைகளைக் கவனித்துப் பார்த்து, இந்தக் காமராஜர் யார் என்பதைத் தீர்மானித்துக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார் — ஆண்டு ஆறுதான் உருண்டோடியுள்ளன அந்த அரிய கருத்துரை நாட்டுக்கு அளிக்கப்பட்ட பிறகு.

பதவியும், அதிகாரிகளை மிரட்டி வளைய வைக்கும் வாய்ப்பும் இருந்தால், அகம்பாவம் ஏற்பட்டு, எப்படிப் பட்டவர்களையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் துணிவு கிளம்பும். இது-காமராஜர் விஷயத்தில் முற்றிலும் உண்மையாகி விட்டது என்பதையும், விடுதலை விளக்குகிறது.

"காமராஜருடைய பதவி காரணமாக காமராஜருக்கு சில அதிகாரிகள் அடங்கி நடக்க வேண்டியதாகவும், காமராஜர் சிபார்சின் மேல் பதவி பெற வேண்டியவர்களாகவும், பல பெரும் தப்பிதங்கள் செய்து தப்பித்துக் கொள்ளவேண்டியவர்களாகவும் இருக்கும்படியான நிலையில் இருப்பதால் காமராஜர் உண்மையிலேயே தான் ஏதோ பெரிய பதவியில் இருக்கும் சர்வாதிகாரி என்பதாகக் கருதிக்கொண்டு அகம்பாவ வெறியில் இருக்கிறார்"

பெரியார் பொதுமக்களைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப, இப்போதும் நாம் சிந்தித்துப் பார்க்கிறோம், தம்பி, காமராஜர்,

கல்வி
திறமை
பொது அறிவு
அனுபவம்

எனும்அருங்குணங்களின் பெட்டகம் என்று முடிவு கட்ட, மனம் இடம் தரவில்லை. பார்ப்பனர்களின் கையாள் என்ற பேச்சும், முதலாளிகளின் பாதுகாவலர் என்ற பேச்சும், பொருளற்றுப் போய் விட்டதாகத் தெரியவில்லை; அன்று போலவே இன்றும் காமராசர் திராவிட இன உணர்ச்சிக்கு மதிப்பளிக்க மறுக்கும் மகானுபவராக இருப்பது கண் கூடாகத் தெரிகிறது—இந் நிலையில் என்ன காரணத்துக்காக அவர் நல்லவர்—நம்மவர் என்று கொள்வது?

இராஜ ரத்தினம்
சுந்தர வடிவேலு

என்று பட்டியல் கொடுத்தால், ஆச்சாரியார் காலத்து

சபாநாயகம்
சிங்காரவேலு;
தேவ சகாயம்
ஞானசம்பந்தம்

என்றும் அடுக்கிக் கொண்டே போகலாமே!!

எனவே, விபீஷணன் என்று திருவில்லிபுத்தூரின் போது காட்டப்பட்ட காமராஜர், அதே போக்கிலே தான் இருக்கிறார் நோக்கமும் வேறு ஆகிவிடவில்லை'.

காங்கிரசோ, முன்பு இருந்ததை விட, மக்களுக்கு, குறிப்பாக தென்னகத்து மக்களுக்குக் கேடு விளைவிக்கும் பாசிச அமைப்பாக மாறிக் கொண்டு வருகிறது.

இதைக் கண்டும், தம்பி! நம்மீது உள்ள கோபத்தைக் காரணமாகக் கொண்டு, காமராஜரை ஆதரித்து, அதன் தொடர்பாகக் காங்கிரசை ஆதரித்து, மீண்டும் காங்கிரசாட்சி ஏற்படுத்தி விட்டால், ஏற்படஉடந்தையாக இருந்தால், நாட்டு நிலைமை எப்படி ஆகும்? தம்பி! நான் கூறினால், பொறி பறக்காது; முன்பு பெரியார் சொன்னதை 'இரவலாக'க் கொண்டு உனக்கும், உன் மூலம், நாட்டுக்கும் தருகிறேன்.

"அடுத்த தேர்தலிலேயும் காங்கிரசு பதவிக்கு வந்து விட்டால் என்ன நடக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நாட்டில மனிதஆட்சியா நடக்கும்? அசல் கரடி, புலி, ஓநாய், சிறுத்தை, சிங்கம் ஆளுகிற மாதிரியான எதிர்ப்பட்டதை அடித்துக் கொல்லுவதான முறையில்தான மிருக ஆட்சி தான் நிச்சயம் நடக்கும்"

அப்படிப்பட்ட 'மிருக ஆட்சி' ஏற்படக்கூடாது, எச்சரிக்கையாக இருங்கள், காங்கிரஸ் கட்சியைப் பாசிச ஸ்தாபனமாக்கி விடாதீர்கள் என்று மக்களிடம் இந்தத் தேர்தலின்போது எடுத்துக் கூறுவோம், தம்பி, நம்மாலே, காங்கிரசின் கேடுபாடு குறித்தும், காமராசரின் திருக்கலியாண குணம் பற்றியும், ஆணித்திறமாக எடுத்துக் கூற முடியாதபோது, காமராஜர் குறித்தும் காங்கிரஸ் பற்றியும், 'விடுதலை' நாட்டுக்குத் தந்துள்ள விளக்க உரைகளைத் தொகுத்து அளித்தாலே போதும், சூடும் சுவையும் நிரம்ப உண்டு.

குரங்குகைப் பூமாலை போல, காங்கிரசு சர்க்கார் வரிப்பணம் போல.

யானை உண்ட விளாம் பழம் போல! காங்கிரசு நிதிக்குக் கொடுத்த பணம்போல.

பெருச்சாளி புகுந்த வீடுபோல! காங்கிரஸ் சர்க்கார் ஆண்ட நாடு போல!

இப்படிப்பட்ட அரசியல் பழமொழிகள் — படப்பிடிப்புகள் — கண்டனங்கள் — விளக்கங்கள் — ஏராளம்—ஏராளம்!!

பேரகராதி நமக்குப் பெருந் துணை புரியும்!!

அன்பன்,

அண்ணாதுரை

உலக அரங்கில்

சூயஸ்

✶

சூயஸ் கால்வாய் தகராறு பற்றி விவாதிக்க இலண்டனில் கூடிய 22-நாடுகளின் மாநாடு முடிவடைந்துவிட்டது. தகராறில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமரசத் திட்டம் மாநாட்டில் உருவாக்கப்படவில்லை! எகிப்துடைய மேற்பார்வையில் ஒரு கார்ப்பரேஷனின் கண்காணிப்பில் சூயஸ் கால்வாயைவிடலாம் என்று கிருஷ்ணமேனன் சமர்ப்பித்த யோசனையும் ஏற்கப்படவில்லை. மாறாக, பல்வேறு நாடுகளைக்கொண்ட ஒரு குழுவின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்கிற அமெரிக்காவின் மூலம் கிளம்பிய யோசனையை 17-நாடுகள் ஏற்றன. ஆனால், இதை நாசர் ஏற்பாரா என்பது சந்தேகமே! எனினும் எகிப்துக்குப் போய் அவரைச்சந்திப்பதற்காக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பாரசீகம், சுவீடன், எதியோப்பியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் போக இருக்கின்றனர். இக்குழுவுக்கு ஆஸ்திரேலியப் பிரதமர் மென்ஸிஸ் தலைவர்.

✷

அமெரிக்கா

★

வரப்போகும் குடியரசுத் தலைவர் தேர்தலில் மீண்டும் ஐசனேவர், குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என்பது உறுதியாகிவிட்டது. துணைத் தலைவர் பதவிக்கு நிக்ஸன், குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார். கடந்த முறை ஐசன்ஹோவரை எதிர்த்து தோற்ற அட்லய் ஸ்டீவன்சனே இம்முறையும் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடப் போகிறார். துணைத் தலைவர் பதவிக்கு கெப்பார் நிற்கிறார். அமெரிக்காவில் ஐசனுக்குள்ள செல்வாக்கு அதிகம் என்றாலும் இம்முறை போட்டி பலமானதாக இருக்குமென்று கருதப்படுகிறது.

✷

பிரிட்டன்

✶

நாட்டின் முக்கியமான துறைகளை தேசிய மயமாக்கவேண்டுமெனும் கோரிக்கை பிரிட்டனில் வலிவு பெற்று வருகிறதாம். கடந்த 16-ந்தேதி பிரிட்டனிலுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் ஒன்று கூடி கப்பல்கள், விமான போக்குவரத்து, இன்சினீயரிங் தொழில்கள் முதலியவைகள் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்று தீர்மான மூலம் கோரியிருக்கிறார்கள். 40-சங்கங்களைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் கூடி தீர்மானித்திருக்கும் இந்த முடிவுகள் அரசின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. ஆளும் கன்சர்வேடிவ் கட்சி, முடிவை செயலாக்குமா என்று இப்போது கூறமுடியாது.

✷

பிரான்ஸ்

★

ஆல்ப்ஸ் மலையின் அடிப்பீட அமைப்பு பற்றி ஆராய்வதற்காக விரைவில் ஒரு செயற்கை பூகம்பத்தைஉண்டாக்கபிரெஞ்சு விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர். டன் கணக்கில் வெடிமருந்துகளைபூமிக்கடியில்கொட்டி அவைகளை வெடிக்கச் செய்வதன்மூலம் மலையினைத்தகர்த்து இந்த ஆராய்ச்சியினைச் செய்ய முன்வந்துள்ளார்கள். உலகிலேயே இப்படி ஆராய்ச்சி செய்யப்படுவது இதுதான் முதல் முறையாகும்.

✷

ஜப்பான்

✶

ரஷ்யாவின் வசமிருக்கும் குணஷீரி, இதுரூப் எனும் இரண்டு தீவுகளைத் தம்மிடம் திரும்ப ஒப்படைக்குமாறு ஜப்பான் கேட்டு வருகிறதல்லவா? இதற்குள்ள ஒரு முக்கிய காரணம், ஜப்பானில் மக்களின் தொகை அதிகமாயிருப்பதும், போதுமான இடமில்லாததும் என்று தெரியவருகிறது. 1941ல் 7-கோடி பேராக இருந்த மக்கள் தொகை இன்று 9-கோடியாகப் பெருகியுள்ளதாம்! இதனால், அங்கு கருத்தடை பற்றி அதிகச் சிரத்தை எடுத்துக்கொள்ளப்படுகிறது. அண்மையில் ஜப்பானிலுள்ள புத்தமதாலயத்தில் ஒரு பூஜை நடைபெற்றது. உலகப் போருக்குப் பிறகு இதுவரையில் இலட்சம் கருச்சிதைவுகள் அங்கு நடைபெற்றுள்ளதாம்! அந்தப் பாபத்தைப் போக்கவே பூஜை நடைபெற்றதாம்!

✷

மேற்கு ஜெர்மனி

★

அமெரிக்காவின் பார்வையிலிருக்கும் மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டுக் கட்சி சட்டவிரோதமானதென்று ஆக 17 பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. சுமார் ஒரு இலட்சத்துக்கு மேல் கம்யூனிஸ்டுகளிருக்கிறார்கள்! கட்சியின் சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. 1951ல் கம்யூனிஸ்டுகள் மீது புகார் செய்து கோர்ட்டில், சர்க்கார் ஒருமகஜர் சமர்ப்பித்தது,தடைசெய்யுமாறு, வழக்கு 1954 பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்போது, தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படித்தான் ஏற்படும் என்பதை கம்யூனிஸ்டுகள்முன்பேஎதிர்பார்த்தனராம் அதனால் பலர், தலைமறைவாகி விட்டனர் என்று கூறப்படுகிறது.

★

கடந்த இதழில் 'மொனாகோ' பற்றி வந்த செய்தியில் கிரேஸ் கெல்லிக்கு, குழந்தை பிறந்து விட்டதாகக் குறிப்பிட்டிருந்தது தவறு, குழந்தை பிறக்க இருப்பதை முன்னிட்டு மக்கள் குதூகலமாயிருக்கிறார்களெனத் திருத்திக் கொள்ளக் கோருகிறோம்.

நவம்பர் முதல் நாள்
தென்னகமெங்கும்
தேனருவி !
அறிஞர் அண்ணாவின்
ரங்கோன் ராதா
மேகலா பிக்சர்ஸ் தயாரிப்பு..
வசனம்
மு.கருணாநிதி
டைரக்ஷன்
A.காசிலிங்கம்
நேஷனல் பிக்சர்ஸ்